# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 155/7 — 1975 මාර්තු 19 වැනි බදාදා — 1975.03.19

155/7 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு மாச்சு மாதம் 19 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபினியு. 68(49) 75.

### பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 40)

முதலமைச்சரின் ஆலோசனையின் மீது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியாலாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1975, மாச்சு 19 ஆம் திகதி.

### ஒழுங்கு விதிகள்

### பாகம் 1—பொது

சுருக்கப் பெயர்.

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

அவசரகால ஒழுங்குவிதிகளின் பொருள் கோடல்கள்.

2. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி, அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறு வகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி, அல்லது சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டு வரும்போது வழக்குரைஞர் தலைமையதிபதியை, எவரேனும் பிரதி வழக்குரைஞர் தலைமையதிபதியை பகிரங்க குற்றவழக்குகள் பணிப்பாளரை, பிரதி பகிரங்க குற்றவழக்குகள் பணிப்பாளரை அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக சட்டத்துறைத் தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அரசுக்குரிய நியாயவாதியாயுள்ள யாரேனும் அரசுக்குரிய நியாயவாதியையும் உள்ளடக்கும் ;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டுவரும்போது, அத்தகைய ஒழுங்குவிதியில் வேறு விதமாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பெயர் கொண்டு அல்லது பதவிப் பெயர் கொண்டு முதலமைச்சரால் நியமிக்கப்படும் ஆள் எனப் பொருள்படும் ;

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது இவ் ஒழுங்குவிதிகளில் ஏதேனுமொன்று, அல்லது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனுமோர் ஒழுங்குவிதி என்று பொருள்படும் ;

"அத்தியாவசிய சேவை" என்பது பொதுமக்களுக்குப் பயன்பாடுடையதாக அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக சனாதிபதியின் கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு சேவை என்று பொருள் தருதலோடு அத்தகைய சேவை உடையதென அவ்விதம் வெளிப்படுத்தப்படும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது திணைக்களக் கிளையையும் உள்ளடக்கும் ;

அத். 183. "வெடிபொருள்" என்பது வெடிபொருள் சட்டத்திற் குறிக்கப்படும் அக்கருத்தினையே உடையது ;

அத். 182. "துவக்கு" என்பது துவக்குவகைக் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளை உடையதாய் இருத்தல் வேண்டும் ;

"பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும் ;

"காணி" என்பது நீர் செறிந்துள்ள நிலத்தையும் வீடுகளின் அல்லது கட்டடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும் ;

அத். 53. "பொலிசு அலுவலர்" என்பது பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப்படையின் உறுப்பினரொருவர் எனப் பொருள்படும் ;

"தேவைக்கெடுத்தல்" என்பது ஏதேனும் சொத்திேனாடு தொடர்புபட்டுவரும்போது சொத்தின் ஆட்சியை எடுத்தல், அல்லது தேவைக்கெடுக்கும் அதிகாரி அச் சொத்தினை வேண்டியவாறு கையாள்வதற்கு வசதி செய்யும்படி பணித்தல் என்று பொருள்படுவதோடு அதன இலக்கண வேறுபாடுகளும் அல்லது கூட்டு மொழிகளும் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

"இலங்கை" என்பது அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளையும் உள்ளடக்கும் ;

"அரச அலுவலர்" என்பது இலங்கையின் அரசியலமைப்புத் திட்டத்திலுள்ள அதே பொருளையே உடைத்து.

"ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது சாதாரண பொங்குதிரைக்கடலின் குறைந்த நீர் அளவிலிருந்து அளக்கும்போது இலங்கைக் கரையோரத்தின் எவ்விடத்திலிருந்து அளந்தாலும் 12 கடல் மைல்களைக் கொண்ட தூரத்திலுள் உள்ள கடலின் அப்பாகம் எனப் பொருளாகும் ;

"கலன்" என்பது ஒவ்வொரு விவரணத்தினவையுமான படகுகள், வள்ளங்கள், மிதவைகள், மரக்கலங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

அத். 2. (2) ஒரு சட்டத்தினை அல்லது கட்டளைச் சட்டத்தினைப் பொருள் அமைத்துக் கொள்வதற்கு பொருள்கோடற் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகவிருக்கும், அவ்வாறே அவசரகால ஒழுங்குவிதியொன்றை அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளை அல்லது விதிகளை பொருளமைத்துக் கொள்வதற்கு அக்கட்டளைச் சட்டம் ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியைப் பற்றிய ஏதேனும் பத்திரத்தில் அல்லது எழுத்து மூலச் சட்டத்தில் வரும் எந்தவொரு குறிப்பீடும், முரணான நோக்கம் தென்பட்டாலொழிய, பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டும், பின்னைய எவையேனும் ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான (அப்போதைக்கு நடைமுறையிலுள்ளதான) அவ் ஒழுங்குவிதியைக் குறிப்பீடு செய்வதாகவே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் சேவையைப் பொதுமக்களுக்குப் பயன்பாடுடையதாக, அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக வெளிப்படுத்தி இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ் சனாதிபதியால் ஆக்கப்படும் எந்தக் கட்டளையும் பொதுவில் இலங்கை முழுமைக்கும் என, அல்லது அந்தக் கட்டளையிற் சுட்டிக் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசத்துக்கென அல்லது பகுதிக்கென ஆக்கப்படலாம்.

(5) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியானது அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறிப்பிடுவதற்குத் தேவைப்படுத்தியிருந்து அல்லது இயல்வதாக்கியிருந்து, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய காலப்பகுதியெதனையும் குறிப்பிட்டிருக்காதவிடத்து, அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வொழுங்கு விதியின்கீழ் தரப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

சனாதிபதியின் தத்துவங்கள்.

3. வேறு விதத்தில் தெட்டத்தெளிவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலல்லாது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு யாரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் உரிமைகளோடு அல்லது தத்துவங்களோடு மேலதிகமானவையாக இருக்கவேண்டுமேயன்றி அவற்றைப் பாதிப்பனவாகவிருத்தலாகாது.

அவசரகால ஒழுங்குவிதியின் கீழ்த் தத்துவங்கள், கடமைகள், தொழில்கள் என்பனவற்றை கையளித்தல்.

4. ஏதேனும் ஓர் அவசரகால ஒழுங்குவிதியால் முதலமைச்சருக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது தொழில் முதலமைச்சரால் அதிகாரமளிக்கப்படும் எந்தவோர் அமைச்சராலும் நிறைவேற்றப்படலாம் அல்லது புரியப்படலாம்.

தகுதிவாய்ந்த அதிகாரி.

5. (1) ஏதேனுமோர் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படும் எவரேனுமொருவரின் நியமனம் பொதுவில் இலங்கையின் முழுவதற்குமாய் இருக்கலாம், அல்லது எந்த எழுத்தின் மூலமாக அத்தகைய ஆள் நியமிக்கப்படுகின்றாரோ அந்த எழுத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசத்திற்கு அல்லது இடத்திற்காய் இருக்கலாம். அத்துடன் அத்தகைய எழுத்து மூலத்திற் குறிப்பிடப்படும் அத்தகைய நோக்கங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாயும் இருக்கலாம் :

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் எவையேனும் நோக்கங்களுக்கென, அல்லது குறிப்பிட்ட ஏதேனும் பிரதேசம் அல்லது இடத்திற்கென தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதை விலக்குவதாகக் கருதப்படலாகாது.

(2) பதவிப் பெயருடைய உத்தியோகமொன்றை வகிக்கும் ஒருவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அதற்கு முரண்படும் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய நியமனம் அப்பதவிப் பெயருடைய உத்தியோகத்தின் கடமைகளை அப்போதைக்கு நிறைவேற்றிவரும் ஆளுக்கும் பொருந்துவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியிற் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் சிறப்பேற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனுமொரு ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக யாரேனுமொருவர்மீது விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை, அந்த ஆளுக்கு அவர் கடைசியாய் இருந்த இடத்திற்கு அல்லது வழக்கமாக வாழிடத்துக்கு அல்லது அவர் வேலை செய்யுமிடத்திற்கு முகவரியிட்ட அஞ்சலில் அனுப்புதன் மூலம், விடுக்கலாம்.

கட்டளைகள் முதலானவற்றை நீக்குதலும் வேறுபடுத்தலும்.

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட எந்தவொரு தத்துவமும், அக்கட்டளையை அல்லது விதியை நீக்குவதற்கு அல்லது வேறுபடுத்துதற்கு அதே முறையிலும், நிபந்தனைகளேதுமுளவாயின் அந்த நிபந்தனைகளுக்கமையவும் கையாளப்படக்கூடிய தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் 2—ஆதனங்களைக் கொள்ளுதலும் தேவைக்கெடுத்தலும் உடற்சேவைகளைப் பணித்தலும்

ஆதனத்தைத் தேவைக்கெடுத்தலும் உரிமையாக்கலும்.

8. (1) இனிமேல் இதன்கண் ஏற்பாடு செய்யப்படுவதற்கமைய, ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி பொதுமக்கள் பாதுகாப்பிற்காக அல்லது பொதுவொழுங்கை நிலைநாட்டுவதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்திவருவதற்கு அவ்வாறு செய்தல் அவசியமானதென்று அல்லது உகந்ததென்று அபிப்பிராயப்படின் அவர் (இலங்கையில் வாசமுள்ள எவரேனும் ஆளொருவருக்குச் சொந்தமான அல்லது இலங்கையிலுள்ள அல்லது இலங்கைத் துறை எதிலுமுள்ள எந்தவொரு கலம் அல்லது விமானமும் உட்பட) இலங்கையிலுள்ள எந்தப் பொருளையும் தேவைக்கெடுக்கலாம் ; அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அவசியமென்று அல்லது உகந்தது என்று தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படும் அத்தகைய பணிப்புக்களையும் கொடுக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் ஆதனத்தைத் தேவைக்கெடுக்குமிடத்து அல்லது குடியரசின் சிறப்புரிமைகளினதும் உரிமைகளினதும் பண்பால் பிரயோகிக்கக்கூடிய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் காரணமாக அல்லது தந்திப் போக்கு வரத்துக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தால் அல்லது ஆகாயப் போக்குவரத்துச் சட்டத்தின் 7 ஆம் பிரிவால் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் ஆட்சியில் அல்லது அவர் கையாள்வதற்கானதாய் (காணியல்லாத) ஏதேனும் ஆதனம் இருக்குமிடத்து, பொதுமக்களின் பாதுகாப்பிற்கு, பொது ஒழுங்கினை நிலைநாட்டற்கு அல்லது சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருவதற்கு உகந்ததென்று தகுதி வாய்ந்த அதிகாரி நினைக்கும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் அத்தகைய முறையிலும் அத்தகைய ஆதனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம், அல்லது பயன்படுத்தும்படி அல்லது கையாளும்படி அதிகாரமளிக்கலாம் ; மேலும் அத்தகைய ஆதனத்தை, அத்தகைய ஆதனம் அதிகாரியின் சொந்தப் பொருளாகவிருந்தாற் போலவும், அவ்வாதனம் ஈட்டினால், அடைவினால், சோந்தையினால், அல்லது வேறு பொறுப்பினால் பாதிக்கப்படாதிருந்தாற் போலவும், தன் வசம் வைத்திருக்கவும் விற்கவும் வேறு வகையாகக் கையாளவும் செய்யலாம் ; இன்னும், தேவைக் கெடுக்கப்பட்ட ஆதனம், மரக்கலம், வாகனம், வானூர்தி, அகழ்வான், பாரந்தூக்கி, கமத்தொழிற் கருவி அல்லது கைத்தொழிற் பொறித் தொகுதியாகவிருக்குமிடத்து, அவற்றின் சொந்தக்காரருக்கு, தகுதிவாய்ந்த அதிகாரி இந்த ஒழுங்குவிதியைப் பின்பற்றி, அதைத் தமக்கு உரித்தாக்கிவிட்டார் என்று கூறும் அறிவித்தல் ஒன்றினைக் கொடுத்தல்மூலம் உரித்தாக்கலாம்.

அத். 192.
அத். 365.

(3) ஏதேனும் மரக்கலம், வாகனம், வானூர்தி, அகழ்வான், பாரந்தூக்கி, கமத்தொழிற் கருவி அல்லது கமத்தொழில் பொறித் தொகுதியின் சொந்தக்காரருக்கு இவ்வொழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் கீழான உரித்தாக்கல் பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுமிடத்து, அவ்வறித்தல் கொடுக்கப்பட்ட நாளின் தொடக்கத்தில்—

(அ) மரக்கலம், வாகனம், வானூர்தி, அகழ்வான், பாரந்தூக்கி, கமத்தொழிற் கருவி அல்லது கமத்தொழிற் பொறித் தொகுதியாகியன ஈடு, அடகு, சோந்தை அல்லது வேறும் பொறுப்புக்களிலிருந்து நீங்கித் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு உரிமையானவையாதல் வேண்டும் ; அத்தோடு

(ஆ) தேவைக்கெடுத்தற் காலம் முடிவடைதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியால் வழங்கப்பட்ட தத்துவங்களைத் திறமையான முறையில் பிரயோகிப்பதற்கு அவ்வாறு செய்தல் அவசியமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், இலங்கை, முழுமை தொடர்பாக, அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் ஏதேனும் பிரதேசம் தொடர்பாக விடுக்கப்படும் கட்டளை ஒன்றன் மூலம் :

(அ) அக்கட்டளை நடைமுறைக்கு வரும் காலத்தில், அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் பிரதேசத்தில் உள்ள ஏதேனும் வளவில் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஏதேனும் பொருளைத் தம்முடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எந்த ஆளும், அந்தப் பொருள் அந்த வளவிலிருந்து, அகற்றப்படுதல், அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் ஆளால் அல்லது அதிகாரியால் அனுமதிக்கப்படும் வரை, அந்தப் பொருளை அந்த வளவிலிருந்து அகற்றலாகாது, அல்லது அகற்ற வழிசெய்யவோ அகற்ற அனுமதி அளிக்கவோ கூடாது என்று பணிக்கலாம்;

(ஆ) அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய தேதியில் மேற்சொல்லப்பட்டபடியான ஏதேனும் பொருள், சொல்லப்பட்ட பிரதேசத்திலுள்ள வளவில் இருந்ததா அல்லது இருக்குமா என்பதையும், அப்படியிருக்குமாயின் அக்கட்டளை பணிக்கும் அந்தத் தேதியில் அந்த வளவில் இருக்கும் பொருளின் எண்ணிக்கை அல்லது தொகை என்ன என்பதையும் கூறும் அல்லது உத்தேசமாகக் கணக்கிடும் எழுத்து மூல வெளிப்படுத்தலை அனுப்பும்படி சொல்லப்பட்ட பிரதேசத்திலுள்ள ஏதேனுமொரு வளவின் சொந்தக்காரரை அல்லது அதிற் குடியிருப்பவரைப் பணிக்கலாம்; அல்லது

(இ) காலத்திற்குக் காலம் தமக்குச் சொந்தமாக அல்லது தம்முடைய ஆட்சியில் அல்லது பாதுகாவலில் அல்லது தமது ஆட்சியின் அல்லது பாதுகாவலின் கீழ், அல்லது தமது கட்டுப்பாட்டின்கீழ், அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய ஏதேனும் வாகனத்தை மேற்சொல்லப்பட்ட கட்டளையிற் குறிப்பிடப்படும் பிரதேசத்தில் வைத்திருக்கும் ஆட்களை, அவ்வாகனங்களைப் பற்றியும் (மாற்றுறுப்புகள் உட்பட) அவற்றின் பாகங்களைப் பற்றியும் துணைப் பகுதிகளைப் பற்றியும் கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய விபரங்களை அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு எழுத்து மூலத்திற் கொடுக்கும்படி பணிக்கலாம்.

(5) நாணயம், பொன், பிணைப்பொருள்கள் அல்லது மாற்று முறிகள் ஆகியன தொடர்பாக இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அளிக்கப்படும் தத்துவங்கள் பிரயோகிக்கப்படா.

(6) இவ்வொழுங்கு விதியில் பொருள்கள் தொடர்பான எந்தக் குறிப்பீடும், பதார்த்தங்கள், வாகனங்கள் அல்லது விலங்குகளையும் குறிப்பீடு செய்வதை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருதல் என்பவற்றுக்காக அவ்வாறு செய்தல் அவசியமென்று அல்லது உகந்ததென்று அபிப்பிராயப்படின் இலங்கையிலுள்ள எந்த அசைவற்ற ஆதனத்தையும் தேவைக் கெடுக்கலாம். அந்தத் தேவைக்கெடுத்தல் தொடர்பாக அவசியமென்று அல்லது உகந்ததென்று அவர்க்குத் தோன்றும் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கவும் செய்யலாம்.

(8) இவ்வொழுங்குவிதியின் 7 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைக் கெடுக்கப்படுமிடத்து, பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அவ்வாதனத்தை பொதுமக்கள் பாதுகாப்பு, அல்லது பொது அமைதி பேணுதல் அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருதல் என்பனவற்றை முன்னிட்டுத் தாம் உகந்ததென்று நினைக்கும் அத்தகைய நோக்கங்களுக்கு அத்தகைய முறையில் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம், அல்லது பயன்படுத்தும்படி அல்லது கையாளும்படி அதிகாரமளிக்கலாம்.

(9) பொலிசுப் படையின் எந்த உத்தியோகத்தரும் அரசாங்கத்தின் எந்த உத்தியோகத்தரும் இந்த ஒழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளால் அளிக்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்கும் எந்த ஆளுக்கும் துணை நிற்கும்படியும் உதவும்படியும் வேண்டப்பட்டு அவ்வாறு செய்தல் வேண்டும்.

(10) இந்த வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென " தகுதி வாய்ந்த அதிகாரி " என்பது—

(அ) பிரயாணிகளின் போக்குவரத்துச் சேவையை நடாத்துதற்குத் தேவையான வாகனங்களை (மாற்றுறுப்புகள் உட்பட) தேவைக்கெடுத்தல் தொடர்பாகவும், பொதுமக்கள் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்கு அல்லது சமுதாயத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருவதற்குத் தேவைப்படும் மரக்கலங்களைத் தேவைக்கெடுத்தல் தொடர்பாகவும் வரும்போது, முதலமைச்சரால் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோராளும் என்று பொருள்படும் ;

(ஆ) உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லற்குத் தேவைப்படும் வாகனங்களை (மாற்றுறுப்புகள் உட்பட) தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும் போது, முதலமைச்சரால் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓர் ஆள் அல்லது அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோராளும் என்று பொருள்படும் ;

(இ) உடல்நலசேவைகள், மருத்துவ சேவைகள் என்பன அளித்தற்காக தேவைப்படும் பொருள்களை (வாகனங்கள் உட்பட) தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது முதலமைச்சரால் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓராள் அல்லது ஒவ்வோராளும் என்று பொருள்படும் ;

(ஈ) பொது அமைதி நிலைநாட்டுவதற்கு தேவைப்படும் வாகனங்களைத் தேவைக்கு எடுத்தல் தொடர்பாக வரும்பொழுது தரைப்படை ஏவுநர், கடற்படை முதல்வர், ஆகாயப்படை ஏவுநர் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைவர் என்று பொருள் படும் ;

(உ) கமத்தொழில் நோக்கங்களுக்கு தேவையான பொருள்களை தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்பொழுது முதலமைச்சரால் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஓராள் அல்லது ஒவ்வோராளும் என்று பொருள்படும் ;

(ஊ) வேறேதேனும் ஒரு பொருளை தேவைக்கெடுத்தல் தொடர்பாக வரும்போது முதலமைச்சரால் பெயர் அல்லது பதவி குறித்து அப்படியானவராக நியமிக்கப்படும் ஆள் அல்லது ஒவ்வோராளும் என்று பொருள்படும்.

(11) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென "பொருள்" என்ற சொல் பெற்றோலியத்தை அல்லது பெற்றோலியத்தின் ஏதேனும் விளைபொருளை அல்லது பக்க விளைபொருளை உள்ளடக்கும்.

9. (1) பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுவதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் தொடர்ந்து நடாத்துவதற்கு அவ்விதம் செய்தல் தேவையானது அல்லது உகந்தது எனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதின், அவர் இலங்கையிலுள்ள எந்த வாகனத்தையும் தேவைக்கெடுக்கலாம் ; எடுத்து அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி தேவையானது அல்லது உகந்ததென்று காணும் அத்தகைய பணிப்புகளை இடலாம். வாகனங்களைத் தேவைக்கெடுத்தல்.

(2) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ்த் தகுதிவாய்ந்த ஓர் அதிகாரி ஏதேனுமொரு வாகனத்தைத் தேவைக்கெடுக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வழங்கல்களையும் சேவைகளையும் தொடர்ந்து செய்து வருவதற்குகந்ததென்று தகுதிவாய்ந்த அதிகாரி கருதும் அத்தகைய நோக்கங்களுக்கும் அத்தகைய முறையிலும் அந்த வாகனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம் அல்லது அந்த வாகனம் பயன்படுத்தப்பட அல்லது கையாளப்பட அதிகாரமளிக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) ஆல் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பயனுறச்செயற்படுத்துவதற்கு அப்படி செய்யவேண்டியது அவசியம் என்று தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உள்ளத்தில் தோன்றினால், இலங்கை முழுமைக்குமாக அல்லது குறித்த ஏதேனும் பிரதேசத்திற்கு மட்டுமாக கட்டளையொன்றைப் பிறப்பிப்பதன் மூலம் அந்தக் கட்டளை நடைமுறைக்கு வருகின்ற அந்த நேரத்தில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படுகின்ற பிரதேசத்தின் கண்ணுள்ள ஏதேனும் வளவில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய வாகனத்தை தம்முடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆள் வெரும் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஆளினால் அல்லது அதிகாரியினால் அந்த வாகனம் அந்த வளவிலிருந்து அப்புறப்படுத்தல் அனுமதியளிக்கப்படும்வரை அந்த வாகனத்தை அகற்றவோ அகற்றும்படி செய்யவோ அகற்ற அனுமதி கொடுக்கவோ கூடாது என்று பணிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளினால் யாரேனுமொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்தகைய ஒருவருக்கு உதவும்படி அல்லது துணைசெய்யும்படி பொலிசுத்தியோகத்தரெவரும் வேறு யாரேனுமோர் அரசாங்க உத்தியோகத்தரும், வேண்டப்படின் அவர்கள் அவ்வாறு உதவ வேண்டும் அல்லது துணைசெய்ய வேண்டும்.

(5) பொலிசுப் படையின் எந்த உத்தியோகத்தரும் அரசாங்கத்தின் எந்த உத்தியோகத்தரும் தரைப்படை ஏவுநர், கடற்படைத் தலைவர், ஆகாயப்படை ஏவுநர், பொலிசுப் பரிசோதகர் தலைவர் அல்லது ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர் என்று பொருள்தரும்.

10. பொதுப் பாதுகாப்பு நிலைநாட்டற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதற்கு உதவிசெய்யும் முகமாக அல்லது அது தொடர்பாக ஏதேனும் வேலைசெய்யும்படி அல்லது உடலுழைப்பு வழங்கும்படி, முதலமைச்சர் தமது கைப்படவுள்ள கட்டளையின் மூலம் எவரையும் பணிக்கலாம் அல்லது அவ்விதமே பணிப்பதற்கான தத்துவத்தை அதற்கெனக் குறிப்பிடப்பட்ட யாரேனுமோரதிகாரி அல்லது அதிகாரிகளுக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு வழங்கலாம். உடற்சேவைகளைப் பணித்தல்.

## பாகம் 3—கூட்டங்கள், ஊர்வலங்கள், பிரசுரங்கள், சுடுபடைக்கலங்கள், உட்பிரவேசிக்கும் உரிமை என்பவற்றைக் கட்டுப்படுத்தல்

11. (1) அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருவதற்காக முழுமையாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படும் அல்லது அதிகாரத்துக்குட்படுத்தப்படும் ஏதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள், அல்லது வளவிற்குள் அதிகாரமில்லாமல் நுழைவதைத் தடுப்பதற்கான சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்பட்டால், அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளை ஒன்றின் மூலம், இக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய விலக்குகளுக்கமைய எந்தவோராளும் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய அதிகாரி அல்லது ஆளின் உத்தரவின்றி அந்தப் பிரதேசத்துக்குள், இடத்திற்குள் அல்லது வளவுக்குள் நுழைய அல்லது இருக்கக்கூடாதென ஏற்பாடு செய்யலாம். கட்டுப்படுத்தப்பட்ட இடங்கள்.

(2) ஒவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை மீறி யாரேனுமோராள் எதேனும் பிரதேசத்திற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் இருப்பின், அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய வேறு நடவடிக்கைகளுள் எதற்கும் பாதகமின்றி அவர் அந்த இடத்திலிருந்து யாரேனும் பொலிசு உத்தியோகத்தரால் அல்லது இலங்கைத் தரைப்படை உறுப்பினரொருவரால் அல்லது இலங்கைக் கடற்படை உறுப்பினரொருவரால் அல்லது இலங்கை ஆகாயப்படை உறுப்பினரொருவரால் அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு யாருமாளால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில், எதேனும் அத்தியாவசிய சேவையோடு தொடர்புற்றுவரும் "தகுதிவாய்ந்த அதிகாரி" என்ற சொற்றொடர் அத்தேவையின் நோக்கங்களுக்காக முதலமைச்சரினால், பெயர் கொண்டு அல்லது பதவிப் பெயர் கொண்டு நியமிக்கப்படும் யாரேனுமோராள் என்று பொருள்படும்.

*ஊர்வலங்கள், கூட்டங்களுக்குத் தடை.*

12. (1) முதலமைச்சர், கட்டளையொன்றன் மூலம், அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையிலுள்ள பிரதேசமெதிலும், குறிப்பிடப்படும் அத்தகைய காலங்களின்போது பொது ஊர்வலங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய பொது ஊர்வலங்கள் அல்லது கூட்டங்கள் நடைபெறுதலை அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழாக்கப்படும் எதேனும் பிந்திய கட்டளையாற் செய்யப்படும் அத்தகைய விலக்குகளுக்கமையத் தடை செய்தல் கூடும்.

(2) இலங்கையின் எதேனுமொரு பிரதேசத்தில் எதேனும் ஊர்வலம் அல்லது கூட்டம் நிகழ்தல் பொது அமைதியைக் குழப்பக் காரணமாயிருக்கும் அல்லது பொதுமக்களுக்குள் வெறுப்பு மனப்பான்மையை ஏற்படுத்தும் என்று முதலமைச்சர் அபிப்பிராயப்படின், முதலமைச்சர் அத்தகைய ஊர்வலங்களை அல்லது கூட்டங்களைத் தடைசெய்யும்படி பணித்தல் கூடும்.

(3) இந்த ஒழுங்கு விதியின் கீழ் ஆக்கப்படும் அல்லது விடுக்கப்படும் எவையேனும் கட்டளைகள் அல்லது பணிப்புகள் இணங்கியொழுகப்படச் செய்வதற்கு, நியாயமான அளவில் தேவையென்று தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலோடு அத்தகைய வலுக்கட்டாயத்தையும் எந்தப் பொலிசுத்தியோகத்தரும் பயன்படுத்தல் கூடும்.

*ஊரடங்குச் சட்டம்.*

13. (1) முதலமைச்சர், இலங்கையின் எதேனும் பிரதேசம் தொடர்பாக, கட்டளையொன்றின் மூலம், அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் எதேனும் பிந்திய கட்டளையால் செய்யப்படும் அத்தகைய விலக்குகளுக்கமைய, அந்தப் பிரதேசத்தில் ஆள் எவரும் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய நேரங்களுக்கிடையில் அல்லது அத்தகைய காலங்களில் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய எதேனும் பொதுத் தெரு, புகைவண்டிப்பாதை, பொதுப் பூங்கா, பொழுதுபோக்குத்திடல் அல்லது வெறு விளையாட்டுத்திடல் அல்லது கடற்கரை அல்லது வேறேதேனும் கட்டடம், வளவு அல்லது இடத்தில் அந்தக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஆளால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் மீதன்றி நிற்கக் கூடாதெனப் பணித்தல் கூடும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில், "பொதுத் தெரு" என்பது பொதுப் பாலமொன்றின் மேலுள்ள எதேனும் தெருவழி, எதேனும் நடைபாதை, எதேனும் வடிகால், அணைக்கட்டு அல்லது பொதுத் தெருவுக்குரிய அல்லது பொதுத் தெருவோடு தொடர்புபட்ட குழி என்பனவற்றை உள்ளடக்கும்.

*பிரசுரங்களைக் கட்டுப்படுத்தல்.*

14. (1) பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது பொதுமக்களின் அமைதியைப் பேணுதற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருவதற்குக் குந்தகம் விளைக்கும் அல்லது விளைக்கக்கூடிய எதேனும் செய்தி, அல்லது கலவரம், கலகம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் புரியும்படி ஆட்களை ஏவும் அல்லது ஊக்கும் செய்தி, இலங்கையில் அல்லது குறிப்பான இலங்கையின் எதேனுமொரு பகுதியில் வெளியிடப்படுதலை அல்லது இலங்கையிலிருந்து பிற இடங்களுக்கு அனுப்பப்படுதலைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி தாம் அவசியமென்று காணும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அத்துடன் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கலாம் ; இந்தப் பந்தியின் கீழ் உள்ள பணிப்புகள், பத்திரங்கள், படமுறைக் குறிப்புகள், ஒளிப்படங்கள், இயக்கப்படங்கள், அல்லது இயக்கப் படத் திரைச் சித்திரங்கள் என்பன வெளியிடப்படுவதன் முன்னர் தகுதிவாய்ந்த அதிகாரிக்குமுன் வைக்கப்படுதலை அல்லது காட்டப்படுதலைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் உட்பட தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அவசியமென்று அல்லது உகந்ததென்று தோன்றும் அத்தகைய விளைவேற்பாடுகளையும் துணையேற்பாடுகளையும் கொண்டிருக்கலாம்.

(2) (அ) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ்க் கொடுக்கப்படும் பணிப்புகளிலேதேனும் ஒன்றை மீறும் ஒவ்வொருவரும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ; செய்தித்தாளொன்றை வெளியிட்டதன் காரணமாக எவரேனும் அத்தகைய குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்படின் அவரை முதலமைச்சர், கட்டளையொன்றின் மூலம் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்திற்கு இலங்கையில் எச்செய்தித் தாளையும் வெளியிடக் கூடாதெனப் பணிக்கலாம்.

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட எதேனும் பணிப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடந்திருக்குமிடத்தும் அத்தகைய முரண்பாடு எதேனும் புதினத்தாளிலுள்ள எதேனும் வெளியீடு தொடர்பிலிருக்குமிடத்தும், (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றித் தகுதிவாய்ந்த அதிகாரியானவர் தாம் நியாயமானது எனக் கருதும் எச்சரிக்கை ஒன்றோ அதற்கு மேற்பட்டனவோ விடுத்த பின்னர்—

(i) ஆளெவரும், கட்டளையிற் குறிப்பிடக்கூடிய அத்தகைய காலத்திற்கு, அத்தகைய புதினத்தாளை அச்சிடுதலாகாது, வெளியிடுதலாகாது அல்லது விநியோகித்தலாகாது அல்லது அச்சிடுதல், வெளியிடுதல் அல்லது விநியோகித்தல் என்பனவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்டிருத்தலாகாது ; அல்லது

(ii) அத்தகைய புதினத்தாள் எவ்வச்சகத்தில் வெளியிடப்பட்டதோ அவ்வச்சகம், கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்திற்குக் கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஏதேனும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய எந்நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுதலாகாதென்றும், அத்தகைய ஏதேனும் கட்டளை அதிற் குறிப்பிடப்படும் எவரேனுமாளை அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதற்கு அவசியமானதென அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை, (கட்டளை எது தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தகைய ஏதேனும் அச்சகத்தை உடைமையிலெடுத்தல் அல்லது அத்தகைய அச்சகம் அல்லது அச்சக வளவுகளுள் அல்லது அதன் ஏதேனும் பாகத்துள் எவையேனும் வளவுகளை உடைமையிலெடுத்தலுட்பட) எடுக்கும்போது எவரேனுமாளுக்கு அதிகாரமளிக்கலாமென்றும்,

கட்டளையிடலாம் ;

(3) ஏதேனும் புதினப்பத்திரிகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அக்கறைகளுக்கும் பொதுமக்கள் ஒழுங்கைப் பாதுகாத்தலுக்கும் சமுதாயத்தினரின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணிவருதலுக்கும் பாதகமானவையாயிருக்கக் கருதப்பட்டுள்ளனவென தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்படும் விடயங்களும், கலவரம், கலகம் அல்லது உள்நாட்டுக்குழப்பம் புரியும்படி ஆட்களைத் தூண்டிவிடுவனவும் அவர்களுக்கு ஊக்கமளிப்பனவுமான விடயங்களும், வெளியிடப்பட்டுள்ளன, வெளியிடப்பட்டிருந்தன அல்லது வெளியிடப்படும் சாத்தியமுடையன எனத் தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படுமிடத்து, அவர் கட்டளை மூலம்—

(அ) ஆள் எவரும் அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய காலத்துக்கு அத்தகைய புதினப்பத்திரிகையினை அச்சிடவோ, வெளியிடவோ, விநியோகிக்கவோ, அல்லது அச்சிடுதலில், வெளியிடுதலில் அல்லது விநியோகிப்பதில் எவ்வழியிலேனும் ஈடுபட்டிருத்தலோ ஆகாது எனவும் அத்தகைய புதினப்பத்திரிகை அச்சிடப்பட்ட அச்சகமானது அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய காலத்துக்கு எத்தகையதுமான நோக்கத்துக்கென அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பயன்படுத்தப்படவோ ஆகாது எனப் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய அக்கட்டளை இணங்கி ஒழுகுவதனை நிலைநாட்டுவதற்கு அவசியமானதென அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை (அக்கட்டளை எவ் அச்சகம் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அவ் அச்சகத்தினையேனும் அதனை அடக்கியுள்ள எவையேனும் வளவுகளையேனும் அத்தகைய அச்சகத்தின் அல்லது வளவுகளின் ஏதேனும் பாகத்தையேனும் உடைமையில் எடுத்துக்கொள்ளல் உட்பட) எடுக்கும்படி அக்கட்டளையிற் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அதிகாரம் அளிக்கவும் செய்யலாம் ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம், (2) ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, அத்தகைய புதினப்பத்திரிகை தொடர்பில் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், அல்லது அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம் அல்லது அத்தகைய கட்டளையினையிடலாம்.

(4) அக்கட்டளையில் பெயர்கொண்டு குறிப்பிடப்பட்ட ஏதேனும் புதினப்பத்திரிகை தொடர்பில் இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) (ஆ) வின் அல்லது பந்தி (3) இன் ஏற்பாடுகளின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளையாக்கியிருக்குமிடத்து, அத்தகைய கட்டளையானது, அப்பெயரின்கீழ் வெளியிடப்படும் ஏதேனும் புதினப்பத்திரிகைக்கு மட்டுமன்றி வேறு ஏதேனும் பெயரின்கீழ் வெளியிடப்படும் புதினப்பத்திரிகையானது அக்கட்டளையிற் குறிப்பிடப்பட்ட புதினப்பத்திரிகையின் வெளியீட்டினைத் தொடர்ந்து வருவதாக அல்லது அதற்குப் பதிலானதாக இருக்குமாயின், அத்தகைய ஏதேனும் புதினப்பத்திரிகைக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) (ஆ) வின் அல்லது பந்தி (3) இன் ஏற்பாடுகளின்கீழ் அது தொடர்பில் கட்டளையாக்கப்பட்டுள்ள ஏதேனும் புதினப்பத்திரிகையை ஆளெவரும் அச்சிடுதலோ, வெளியிடுதலோ, அல்லது விநியோகித்தலோ அல்லது அச்சிடுதலில், வெளியிடுதலில் அல்லது விநியோகித்தலில் எவ்வழியிலேனும் சம்பந்தப்பட்டிருத்தலோ ஆகாது.

(6) இவ்வொழுங்குவிதியின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் பின்னர் எந்த நேரத்திலும், முதலமைச்சர், அவர் தகுந்ததென்று கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அக்கட்டளை செயற்படுதலை நிறுத்திவைக்கும்படி பணிக்கலாம் ; அத்தகைய பணிப்பை அழிக்கவும் செய்யலாம்.

(7) ஏதேனும் ஓர் அச்சகம் அல்லது யாரேனுமோராளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஓர் அச்சகம் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது பொதுமக்களின் அமைதியைப் பேணுதற்கு, அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடாத்தி வருவதற்குக் குந்தகம் விளைக்கவெனக் கருதப்படுகின்றதாகத் தாம் அபிப்பிராயப்படுகின்ற செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, அல்லது கலவரம், கலகம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் புரியும்படி ஆட்களை ஏவும் அல்லது ஊக்கும் செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதென்று அல்லது பயன்படுத்தப்படலாமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், கட்டளையொன்றின் மூலம் அந்த அச்சகம், அல்லது விடயத்துக்கேற்ப, அந்த ஆளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள எல்லா அச்சகங்களும் அல்லது அவற்றுள் எதுவும் அக்கட்டளை வலுவிலுள்ள காலம் வரைக்கும் எந்தவொரு நோக்கத்திற்கும்

அல்லது கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படலாகாது எனக் கட்டளை மூலம் பணிக்கலாம்; மேலும் அத்தகைய எந்தக் கட்டளையும் அதிலே குறிப்பிடப்பட்ட ஆட்களுள் எவரையும் அக்கட்டளைக்கு இணங்கும்படி செய்தற்குத் தேவையென்று, அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை (எந்த அச்சகம் தொடர்பாகக் கட்டளை விடுக்கப்பட்டதோ அந்த அச்சகத்தை ஆட்சியெடுத்தல் அல்லது அந்த அச்சகம் அமைந்துள்ள எந்த வளவையும் ஆட்சியெடுத்தல் அல்லது அத்தகைய அச்சகத்தின் ஒரு பகுதியை ஆட்சியெடுத்தல் அல்லது அத்தகைய வளவின் ஒரு பகுதியை ஆட்சியெடுத்தல் உட்பட) எடுக்க அதிகாரமளிக்கலாம்.

(8) இவ்வொழுங்கு விதியின் (2) (ஆ) ஆம், (3) ஆம், (7) ஆம் என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டு ஆலோசனைக்குழு ஒன்றோ பலவோ இருத்தல் வேண்டும். (3) ஆம் (7) ஆம் பந்திகளுள் எதன் கீழும் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை முறையற்றது என்று யாரேனுமொருவர் கருதினால், அவர் அது தொடர்பான ஆட்சேபனைகளை இயைபான ஆலோசனைக் குழுவுக்குத் தெரிவிக்கலாம்.

(9) இவ்வொழுங்கு விதியின் (2) (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (3) ஆம் அல்லது (7) ஆம் பந்தியின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட்டவிடத்து, அத்தகைய கட்டளையாற் பாதிக்கப்பட்ட செய்தித்தாளுடைமையாளருக்கு அல்லது அச்சகச் சொந்தக்காரருக்கு, அந்தக் கட்டளை தொடர்பாக அவர் முதலமைச்சருக்கு எழுத்துமூலம் அவருடைய முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும், அவ்வாறு முதலமைச்சருக்கு முறைப்பாடு செய்தாலுஞ்சரி, செய்யாவிட்டாலுஞ்சரி, அவரது ஆட்சேபனைகளை ஆலோசனைக் குழுவிற்குத் தெரிவிக்கலாம் என்றும் அறிவுறுத்துவித்தல், தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(10) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனையை பரிசீலனை செய்யும் பொருட்டுக் கூட்டப்படும் ஆலோசனைக்குழுக் கூட்டம் எதுவும் முதலமைச்சரால் நியமிக்கப்படும் தலைவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கும் ஒவ்வோராளும், தமது ஆட்சேபனைக்கு ஆதாரமாக வேறு முறைப்பாடுகளை நேர்முகதாவில் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(11) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனைகள் மீது, ஆலோசனைக் குழு தெரிவிக்கும் அறிக்கை முதலமைச்சர் முன் வைக்கப்படுதல் வேண்டும். முதலமைச்சர் அதைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர், அவ் ஆட்சேபனைகள் எந்தக் கட்டளை தொடர்பாக எழுப்பப்பட்டனவோ அந்தக் கட்டளையை அழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(12) இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகளில் ஏதேனுமொன்றை அல்லது இவ்வொழுங்கு விதியின் பந்தி (6) இன் கீழ்க் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்போடு இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் நிபந்தனையை மீறி ஏதேனுமொரு செய்தித்தாள் அச்சிடப்பட்டவிடத்து அல்லது வெளியிடப்பட்டவிடத்து அல்லது பரப்பப்பட்டவிடத்து, அந்தச் செய்தித் தாளின் சொந்தக்காரன், முகாமையாளர், பதிப்பாசிரியர், வெளியிடுவோர் என்கின்ற எல்லோரும்—மீறுகையின் விளைவாக அந்தப் பணிப்பு அழிக்கப்பட்டாலுஞ்சரி அழிக்கப்படாவிட்டாலுஞ்சரி—குற்றமொன்றுக்காகத் தனித்தனியாகக் குற்றவாளிகளாதல் வேண்டும்.

(13) இந்த ஒழுங்குவிதியில்—

(அ) "இயக்கப்படத் திரைச் சித்திரங்கள்" என்பது ஒலிச்சுவடியையும், அத்தகைய திரைச் சித்திரத்தை மற்றோர் பார்க்கும்படி செய்தல் தொடர்பாகத் திருப்பி உண்டாக்கும் நோக்கத்திற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வேறு ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும்;

(ஆ) "வெளியிடுதல்" என்பது இயக்கப்படத் திரைச் சித்திரங்களோடு தொடர்புபட்டு வருங்கால், அத்தகைய திரைச் சித்திரத்தைப் பொதுமக்களுக்குக் காட்டுதல் என்று பொருள்படுவதோடு, திரைச் சித்திரத்தை மேற்குறித்தவாறு பொதுமக்களுக்குக் காட்டுதல் தொடர்பில் ஏதேனும் ஒலியைப் பொறிமுறையாக, அல்லது மின்சார முறையாக மீளவும் ஒலிக்கும்படி செய்தலையும் உள்ளடக்கும்;

(இ) "செய்தித்தாள்" என்பது ஏதேனும் இதழ், சஞ்சிகை, துண்டறிக்கை அல்லது வேறு வெளியீட்டினையும் உள்ளடக்கும்;

(ஈ) "அச்சிடும் அச்சகம்" என்பது அச்சிடுதற்கு, சிலைப்பதிவு செய்தற்கு, ஒளிப்படம் பிடித்தற்கு அல்லது சொற்களைக் காணக்கூடிய முறையில் எடுத்துக்காட்டுவதற்கான அல்லது திரும்பத் தோற்றுவித்தற்கான வேறு செயல்முறைக்குப் பயன்படுத்த உகந்த பொறியமைப்பு, உபகரணம் அல்லது பொறித் தொகுதி என்பவற்றையும் அல்லது அத்தகைய பொறியமைப்பு, உபகரணம் அல்லது பொறித் தொகுதியைச் சேர்ந்த ஏதேனும் அச்சு அல்லது வேறு பொருளையும்

உள்ளடக்கும்.

துவக்குகளும் வெடிப் பொருள்களும்.

15. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் பொதுமக்கள் பாதுகாப்பையும் பொது அமைதியையும் உறுதிப்படுத்துவதற்காக எந்தவோராளிடமுமுள்ள எந்தவொரு துவக்கும் அல்லது வெடிபொருளும் தாம் துணியும் அத்தகைய பாதுகாப்பிடத்திற் கொடுக்கப்பட்டு வைக்கப்படுதல் வேண்டுமெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி பணிக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியில் (1) ஆம் பந்தியின் கீழ்ப் பொலிசுப் பரிசோதகர் தலைவரால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பில் பெயர் அல்லது பதவி குறித்து அது சார்பாகக் குறிப்பிடப்பட்ட எந்த ஆளும் அத்தகைய பணிப்பை நிறைவேற்றலாம். அத்தகைய பணிப்பை நிறைவேற்றும் நோக்கங்களுக்கென அத்தகைய ஆள் வேறு ஆளின் அல்லது ஆட்களின் துணையோடு எந்தவொரு வளவு அல்லது வீட்டிற்குள்ளும் நுழையலாம்; அத்தகைய வளவுக்குள் அல்லது இடத்திற்குள் நுழையும் நோக்கத்திற்கென ஏதேனும் வெளிக்கதவை அல்லது உட்கதவை அல்லது வெளிச் சாளரத்தை அல்லது உட்சாளரத்தை திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்; மேலும் ஏதேனும் துவக்கு அல்லது வெடிபொருள் இருப்பதாக அத்தகைய ஆள் சந்தேகிக்கும் அத்தகைய ஏதேனும் வைப்பிடம் அல்லது சேமிப்பிடத்தையும் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ்ப் பொலிசுப் பரிசோதகர் தலைவரால் விடுக்கப்பட்ட பணிப்பிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் துவக்கை அல்லது வெடிபொருளை எந்த வேனாளும் மறைக்கவோ, அத்தகைய பணிப்பு நிறைவேற்றப்படுதலைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்யவோ கூடாது.

(4) ஓராம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும்போது—

(அ) சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்க அதிபரே நேரிடையாக உரிமமளிக்கும் அதிகாரியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க, மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் அல்லது வேறு அலுவலர் எவரும், மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கும் அதிகாரி என்ற தன்மையில் அரசாங்க அதிபருக்குள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலுமாகாது.

ஆயின், எப்படியிருப்பினும், அரசாங்க அதிபர், மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான அவரது தத்துவத்தை மேலதிக அரசாங்க அதிபருக்கு, உதவி அரசாங்க அதிபரொருவருக்கு அல்லது பெரும்பாக அரசிறை அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம்; அத்துடன்

(ஆ) அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், அல்லது மேலதிக உதவி அரசாங்க அதிபர் எவரும், அத்துடன் அரசாங்க அதிபரினால் வெடிப்பொருள்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அரச அலுவலர் எவரும், வெடிப்பொருள்கள் சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமமளிக்கும் அதிகாரியொருவராகவிருத்தலாகாது என்பதுடன் அச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் செயலாளரே உரிமமளிக்கும் அதிகாரியாகவிருத்தலும் வேண்டும்.

ஆயின், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ், செயலாளர், உரிமமளிக்கும் அதிகாரி என்ற முறையில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் அரச அலுவலரை அவரது பிரதியாளாக நியமிப்பதை இவ்வுட்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் தடுப்பனவாகக் கருதப்படுதலாகாது.

(5) துவக்குவகைக் கட்டளைச் சட்டத்தின்கீழ், துவக்கு வியாபாரம் செய்ய அனுமதியளிக்கப்பட்ட யாரேனுமொரு வியாபாரி இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் அல்லது விற்பதற்கென வெளிக்காட்டியிருக்கும் அல்லது விற்பதற்காக வைத்திருக்கும் எந்தவொரு துவக்கையும் கைப்பற்றும்படியும் தாம் முடிவு செய்யும் அத்தகைய இடத்திற்கு அதை அகற்றும்படியும், அங்கு அதை வைத்திருக்கும்படியும் செயலாளர் கட்டளை விடுக்கலாம்.

(6) இவ்வொழுங்கு விதியின் (5) ஆம் பந்தியின் கீழ்ச் செயலாளர் விடுக்கும் கட்டளை குறிக்கும் ஏதேனும் துவக்குகளை எந்த ஆளும் மறைக்கவோ அத்தகைய கட்டளை நிறைவேறுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்யவோ கூடாது.

(7) வெடிபொருட் சட்டத்தின்கீழ் அனுமதி அளிக்கப்பட்ட யாரேனுமோர் ஆள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் அல்லது இலங்கையில் தயாரிக்கும் அல்லது இலங்கையில் விற்பதற்கென வெளிக்காட்டியிருக்கும் அல்லது விற்பதற்கென வைத்திருக்கும் வெடி பொருள்களை, அல்லது அந்தச் சட்டத்தின் கீழ் வெடிபொருட்கள் தயாரிப்பவரின் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும்படி அனுமதியளிக்கப்பட்ட யாரேனுமோராளிடமுமுள்ள வெடிபொருட்களைக் கைப்பற்றும்படியும் அவற்றைத் தாம் துணியும் அத்தகைய இடத்திற்கு எடுத்துச் சென்று வைத்திருக்கும்படியும் செயலாளர் கட்டளையிடலாம். அத். 183.

(8) இவ்வொழுங்கு விதியின் (7) ஆம் பந்தியின் கீழ்ச் செயலாளர் விடுக்கும் கட்டளை குறிக்கும் வெடிபொருளை எந்த ஆளும், மறைக்கவோ அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்யவோ கூடாது.

(9) இவ்வொழுங்கு விதியின் (5) அல்லது (7) ஆம் பந்தியின் கீழ்ச் செயலாளரால் விடுக்கப்படும் கட்டளையில் அது சார்பாகக் குறிப்பிடப்படும் எந்தவோராளும் அத்தகைய கட்டளையை நிறைவேற்றலாம். அத்தகைய கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்துக்கென அத்தகைய ஆள் எவரேனும் வேறு ஆளின் அல்லது ஆட்களின் உதவியுடன் அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் வளவுக்குள் அல்லது இடத்திற்குள் நுழையலாம். அத்தகைய வளவுக்குள் அல்லது இடத்திற்குள் நுழையும் நோக்கத்திற்கென ஏதேனும் வெளிக் கதவை அல்லது உட்கதவை அல்லது வெளிச் சாளரத்தை அல்லது உட்சாளரத்தைத் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம். மேலும் அத்தகைய ஆள் எவரேனும் துவக்கு அல்லது வெடிபொருள் வைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கும் ஏதேனும் வைப்பிடம் அல்லது சேமிப்பிடத்தையும் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்

அத். 183.

(10) (அ) துவக்கு வகைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தின் அதிகாரத்தில் துவக்கு வியாபாரம் செய்யும் ஒவ்வொருவரும், அல்லது

(ஆ) வெடிபொருட் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தின் அதிகாரத்தால் வெடிபொருட்களை இறக்குமதி செய்பவராக அல்லது தயாரிப்பவராக அல்லது விற்பவராக, அல்லது வழங்குபவராக உள்ள ஒவ்வொருவரும், அல்லது

(இ) வெடிபொருட் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டையுடைய ஒவ்வொருவரும்,

செயலாளர் குறிப்பிடக்கூடிய அத்தகைய கால எல்லைக்குள் செயலாளர் காலத்திற்குக் காலம் பணிக்கும் அத்தகைய திரட்டுக்களை அவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(11) இவ்வொழுங்கு விதியின் வலுவுடையதாயிருக்கும் காலத்தில் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனுமொரு பிரதேசத்தில் துவக்கு வகைக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவும் வெடிபொருள் சட்டத்தின் 10 ஆம், 22 ஆம் பிரிவுகளும் அந்தப் பிரதேசத்தில் நடைமுறையிலிருத்தலாகாது.

(12) இவ்வொழுங்குவிதியில்—" செயலாளர் " என்பது துவக்கு வகைக் கட்டளைச் சட்டம் சம்பந்தமாக உண்ணாட்டலுவல் அமைச்சின் செயலாளரென்றும், வெடிபொருட் சட்டம் சம்பந்தமாகப் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் என்றும் பொருள்படும்.

16.—

பாகம் 4—கண்காணித்தல், தேடுகையிடுதல், கைது செய்தல், தடுத்துவைத்தல் என்பன

ஐயுறப்பட்ட ஆட்களை மேற்பார்வை செய்தலும் மட்டுப் படுத்தற் கட்டளைகளும்.

17. (1) எவரேனும் குறிப்பிட்ட ஆளொருவர் தொடர்பில், அவ்வாளை—

(அ) பொதுமக்கள் பாதுகாப்புக்கு, அல்லது பொதுமக்கள் ஒழுங்கினைப் பேணுவதற்கு அல்லது அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்குப் பங்கமான எம்முறையிலும் செயலாற்றுவதனை ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 24 ஆம் ஒழுங்குவிதியின், அல்லது 38 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் அல்லது (ஆ) என்னும் உட்பந்தியின், அல்லது 68 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு முரணான எம்முறையிலும் செயலாற்றுவதனை, தடுக்கும் நோக்கத்துடன் அவ்வாறு செய்தல் அவசியமானதெனப் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பின்வரும் எல்லா அல்லது எவையேனும் நோக்கங்களுக்காகச் செயலாளர் கட்டளையொன்றை ஆக்கலாம் —

(i) அக்கட்டளையினால் அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அதிகாரியினால் அல்லது ஆட்களினால் அனுமதிக்கப்படக் கூடிய அளவுக்கன்றி, அவ்வாள், அவ்வாறு குறிப்பிடப்படக்கூடிய இலங்கையிலுள்ள அத்தகைய ஏதேனும் இடப்பரப்பில் இருத்தலாகாதென்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ;

(ii) அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய முறையிலும், அத்தகைய நேரங்களிலும் அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு அவரது நடமாட்டங்களை அவ்வாள் அறிவிப்பதனைத் தேவைப்படுத்துவதற்கும் ;

(iii) அக்கட்டளையிற் குறிப்பிடக்கூடியவாறான அத்தகைய அதிகாரியின் அல்லது ஆளின் அனுமதியின்றி அவ்வாள் அவரது, வதிவிடத்தினை விட்டுச் செல்வதனைத் தடைசெய்வதற்கும், அக்கட்டளையிற் குறிப்பிடப்படக் கூடியவாறான அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரியினால் அல்லது ஆளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிலன்றி வேறெவரேனுமாள் அத்தகைய வதிவிடத்தினுள் நுழைவதனை அல்லது அதனை விட்டுச் செல்வதனைத் தடைசெய்வதற்கும் ;

(iv) அவ்வாள் கடவுச்சீட்டு அல்லது இலங்கைக்கு வெளியில் பயணஞ் செய்வதற்காகப் பயணம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்லது பயணத்திற்கான சீட்டுக்கள் உடையவராயிருந்தால், அவரை, அக்கட்டளையில் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரியிடம் அல்லது ஆளிடம் அத்தகைய கடவுச்சீட்டை அல்லது விடயத்திற்கேற்ப பயணஞ் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அல்லது சீட்டுக்களை ஒப்படைக்கும்படி தேவைப்படுத்துவதற்காக ;

(v) குறிப்பிடப்பட்ட எவையேனும் பொருள்களை அவ்வாள் உடைமையில் வைத்திருப்பதனை அல்லது பயன்படுத்துவதனைத் தடைசெய்வதற்கும் அல்லது மட்டுப்படுத்தற்கும் ; அத்துடன்

(vi) அவரின் தொழில் அல்லது வியாபாரம் தொடர்பிலும், வேறு ஆட்களுடன் அவர் பழகுவது அல்லது தொடர்பு கொள்வது தொடர்பிலும் செய்திகளைப் பரப்புதல் அல்லது அபிப்பிராயங்களைப் பிரசித்தம் செய்தல் தொடர்பிலான அவரது நடவடிக்கைகள் தொடர்பிலும் அக்கட்டளையிற் குறிப்பிடப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளை அவ்வாள்மீது சுமத்துவதற்கும் ;

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (i) ஆம் உப்பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு மீறுதலாக ஆளெவரும் இடப்பரப்பெதினுமிருந்தால் அல்லது அத்தகைய வொரு கட்டளைக்கிணங்க ஏதேனும் இடப்பரப்பினை விட்டுச்செல்லத் தவறினால், அப்பொழுது, அவர்க்கெதிராக எடுபடக்கூடியவான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுககுப் பங்கமின்றி, அவர், எவரேனும் பொலிசு அலுவலரினால் அல்லது பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளினால் அவ்விடப்பரப்பிலிருந்து அகற்றப்படலாம்.

18. (1) பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர், யாரேனுமோர் ஆள் தொடர் பாக அவ் ஆள்— ஆட்களைத் தடுப்புக் காவலில் வைத்தல்.

(அ) பொதுமக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியை நிலைநாட்டுதற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்துவதற்குப் பாதகமான செயல்களைச் செயவதிலிருந்து தடுப்பதற்கு ; அல்லது

(ஆ) அவ்வொழுங்கு விதிகளின 38 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) எனனும் உபபந்திகளின ஏற்பாடுகளிலேதேனும் ஒன்றிற்கு அல்லது 24 ஆம் ஒழுங்குவிதிக்கு முரண்படும் ஏதேனுமொரு முறையில் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்கு,

அவசியமென்று அபிப்பிராயப்படின் அத்தகைய ஆளைப் பாதுகாவலில் வைக்கும்படி அல்லது பாது காவலிற் தடுத்துவைக்கும்படி செயலாளர் கட்டளையிடலாம்.

(2) யாரேனும் பொலிசுத்தியோகத்தர் அல்லது இலங்கைத் தரைப்படையுறுப்பினர் அல்லது இலங்கைக் கடற் படையுறுப்பினர் அல்லது இலங்கை ஆகாயப் படையுறுப்பினர் இவ்வொழுங்கு விதியின (1) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைச் செயற்படுத்தவும், அந்நோக்கத் திற்குத் தேவையான அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தவும் உரிமையுடையராதல் வேண் டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றித் தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவர், சட்டப்படியான, காவலில் வைக்கப்பட்டவராகக் கருதப்பட வேண்டுமென்பதோடு பொலிசுப் பரிசோதகர் தலைவர் அதிகாரம் அளிக்கும் அத்தகைய இடத்திலும் அவரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமையவும் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும் ; மேலும் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறைச்சாலையொன்றில் அத்தகைய ஆள் அவ் வாறு தடுத்து வைக்கப்பட்ட விடத்து— அத். 54.

(அ) அக்கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பகுதியின் ஏற்பாடுகளல்லாத மற்றெல்லா ஏற்பாடு களும்,

(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கைதிகளைப் போய்ப் பார்த்தல் என்பவற் றைப் பற்றிக் கூறும் விதிகள் தவிர்ந்த ஏனைய எல்லா விதிகளும்,

அத்தகைய ஆள் அக்கட்டளைச் சட்டத்தின் கருத்துப்படியான சிவில் கைதி ஒருவரானாற் போன்று அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும் :

ஆயின், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அவ்வாறு செய்தல் உகந்த தென்று காணுமிடத்து—

(அ) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாகும் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலேதேனுமொன்று அல்லது அக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏதேனுமொன்று ஏற்புடையதா தல் ஆகாது, என்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய திருத்தங்கள் அல்லது திரிபுகளுக்கமைய ஏற்புடையதாதல் வேண்டும் என்று கட்டளையாற் பணிக்கலாம் ; மேலும்

(ஆ) செயலாளர் காலத்திற்குக் காலம் பணிக்கக்கூடிய அத்தகைய முறையினும் அத்தகைய இடத்திலும் நேரத்திலும், அத்தகைய ஆளைப் போய்ப் பார்க்கவும் அத்தகைய ஆளோடு தொடர்பு கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கென சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றோ பலவோ இருத்தல் வேண்டும் ; இவ்வொழுங்குவிதியின் கீழ் ஒருவருக்கெதிராக விடுக்கப்பட்ட கட்டளையொன்றால் வருத்தமுறும் ஆள் எவரும் தமது ஆட்சேபனை களை மேற்குறிப்பிடப்பட்ட குழுவிற்கு அறிவிக்கலாம்.

(5) இவ்வொழுங்குவிதியின்கீழ்க் கட்டளை விடுக்கப்பட்ட யாரேனும் ஒருவர், அக்கட்டளை தொடர்பாகத் தமது முறையீடுகளை எழுத்து மூலத்தில் முதலமைச்சருக்குத் தெரிவிப்பதற்கான நடைமுறை வாய்ப்புக்கள் நேரகாலத்தோடு அவர்க்கு அளிக்கப்படும் எனவும், அத்தகைய முறையீடுகள் செய்யப்படினும் சரி செய்யப்படாவிடினும் சரி, மேற்சொல்லப்பட்ட குழுவிற்குத் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தற்கு அந்த ஆளுக்கு உரிமையுண்டு எனவும் உறுதிசெய்து கொள்ளுதல் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபனைகளைக் கேட்டு முடிவு செய்தல் தொடர்பான விதிகள் சனாதிபதியால் ஆக்கப்படலாம்.

(6) மேற்சொன்ன அத்தகைய ஆட்சேபனைகளை ஆராய்வதற்கென கூட்டப்படும் ஆலோசனைக் குழு எதற்கும், சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரே தலைமை வகித்தல் வேண்டும்; இந்த ஒழுங்குவிதியின்கீழ் எந்தெந்தக் காரணங்களுக்காக அவர்க்கெதிராகக் கட்டளை விடுக்கப்பட்டது என்பதை ஆட்சேபனை விடுபவர்களுக்கறிவித்து நியாயத்தை எடுத்துரைப்பதற்குப் போதுமானவை எனத் தலைவர் அபிப்பிராயப்படும் அத்தகைய விபரங்களைக் கொடுத்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(7) ஆலோசனைக் குழு மூன்று ஆட்களை உடையதாருக்குமிடத்து, ஏதேனுமொரு கூட்டத்தைக் கூட்டுவதற்கு வேண்டிய கூட்ட நடப்பெண் இரண்டாயிருத்தல் வேண்டும்; மூன்றிற்கு மேற்பட்ட ஆட்களை உடையதாய் இருக்குமிடத்துக் கூட்ட நடப்பெண் மூன்றாயிருத்தல் வேண்டும்.

(8) மேற்சொன்ன அத்தகைய ஏதேனும் ஆட்சேபனை தொடர்பான ஆலோசனைக் குழுவின் அறிக்கை, பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் முன் வைக்கப்படுதல் வேண்டும்; அவர் அதை ஆராய்ந்த பின்னர் ஆட்சேபனைகள் எக்கட்டளை தொடர்பாக எழுப்பப்பட்டனவோ அக்கட்டளையை அழிக்கலாம்.

(9) பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இவ்வொழுங்குவிதியின் 1 ஆம் பந்தியின் கீழான ஒரு கட்டளை எவ்வாள் தொடர்பாக விடுக்கப்பட்டதோ அவ்வாள் இவ்வொழுங்குவிதிகளின் 68 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்த் தடைசெய்யப்பட்ட நிறுவகத்தின் உறுப்பினரென்று அல்லது உறுப்பினராயிருந்தவரென்று, தம்மால் ஐயுறப்படுவதாக எழுத்து மூலத்தில் சான்றுரைக்குமிடத்து, இவ்வொழுங்குவிதியின் (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம், (8) ஆம், பந்திகளின் ஏற்பாடுகள் அத்தகைய ஆட்களுக்கு ஏற்புடையனவாகா.

(10) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான ஒரு கட்டளை எக்காரணத்தினைக் கொண்டும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

தேடுதல், கைப்பற்றல், கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பவற்றிற்கான தத்துவங்கள்.

19. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஒரு குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதாக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் ஆள் ஒருவரை, யாரேனும் பொலிசுத்தியோகத்தர், இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை ஆகாயப்படை என்பவற்றிலுமுள்ள யாரேனுமுறுப்பினர் அல்லது சிறைச்சாலை ஆணையாளர் அல்லது சிறைச்சாலையின் யாரேனும் கண்காணிப்பாளர், உதவிக் கண்காணிப்பாளர் அல்லது தகுதிகாண் காலத்துக் கண்காணிப்பாளர், அல்லது யாரேனும் கைதிக் காவலாளர், அல்லது பிரதிக் கைதிக் காவலாளர், அல்லது யாரேனும் சிறைக் காவலன், அல்லது சிறை மேற்பார்வையாளர், அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் செயலாற்றும்படி முதலமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர், தேடுகை செய்யலாம், அத்தகைய தேடுகை செய்தற்காகத் தடுத்துவைக்கலாம், அல்லது பிடியாணையில்லாமலே கைது செய்யலாம்; மேலும் அக்குற்றம் புரிவதில், அல்லது அதன் தொடர்பாக உபயோகிக்கப்பட்ட எவ்விதமானதுமான ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள் அல்லது பதார்த்தத்தைத் தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம், அல்லது தடுத்து வைக்கலாம்.

(2) முதலமைச்சர் யாரேனுமொருவருக்கு—

(அ) எந்தவொரு வளவு, இடம், வாகனம் அல்லது மரக்கலத்துள்ளும் புகுவதற்கும் தேடுகையிடுவதற்கும்,

(ஆ) யாரேனுமொருவரைத் தேடுகையிடவும் தேடுகையிடும் நோக்கத்துக்காகத் தடுத்து வைக்கவும்,

அத்தகைய தேடுகையிடுதலின்போது கண்டுபிடிக்கப்படும் ஏதேனும் பொருளை, பதார்த்தத்தை அல்லது வேறெந்த வகையான பொருளையும் கைப்பற்றவும் அகற்றவும் பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அல்லது பொதுமக்கள் அமைதியை நிலைநாட்ட அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அத்தகைய பொருட்களைப் பரிசோதித்தல் அல்லது பொறுப்பெடுத்தல் அவசியமென்று அத்தகைய தேடுகையிடுதலை நடாத்தும் ஆள் அபிப்பிராயப்படின் அவ்வாறு பரிசோதிக்கவும் அல்லது பொறுப்பெடுக்கவும் எழுத்துமூலம் அதிகாரமளிக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) இன் கீழ், தேடுகையிடுதலை நடாத்தும் யாரேனுமொருவர், அவரது தேடுகையிடுதலின் நோக்கத்தோடு தொடர்புபட்ட அல்லது சம்பந்தமுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக தேடுகையிடப்படும் வளவில் அல்லது இடத்தில் அல்லது மரக்கலத்தில் அல்லது வாகனத்தில் உள்ள எவரையும் அல்லது தேடுகையிடப்படும் ஆளை கேள்விகள் கேட்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் பந்தி (3) இன் கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வோர் ஆளும், அவர் விசாரிக்கப்படும் அந்தக் கருமம் தொடர்பாக அவருக்குத் தெரிந்துள்ள அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் கீழ்த் தேடுகையிடப்படவேண்டிய ஏதேனும் வளவில், இடத்தில், வாகனத்தில் அல்லது மரக்கலத்தில் வசிப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர், தேடுகையிடுதலை நடாத்துபவர் கேட்டவுடன் அவரை அவற்றுள் நுழையவிடுத்து அவர் தேடுகையிடுதற்கு வேண்டிய வசதிகளையும் செய்தல் வேண்டும்.

(6) இந்த ஒழுங்குவிதியின் கீழான ஒரு தேடுகையிடுதலை நடாத்தும் எவரும், தேடுகையிடப்படவேண்டிய வளவு, இடம், வாகனம் அல்லது மரக்கலத்துள் நுழைதற்காக ஏதேனும் உட்கதவை அல்லது வெளிக்கதவை அல்லது உள் யன்னலை அல்லது வெளியன்னலை உடைக்கலாம்.

(7) பெண்ணொருத்தியைத் தேடுகையிடுதல் அவசியமென்று கண்டவிடத்து, வேறொரு பெண்ணைக் கொண்டு அப்பெண்ணைத் தேடுகையிடுதல் வேண்டும்.

(8) (அ) இந்த ஒழுங்குவிதியின் கீழ்க் கைது செய்யப்பட்ட எந்த ஆளும் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து அகற்றப்பட்டு இலங்கையின் எந்தப் பாகத்திலும் கட்டுக்காப்பிற்றடுத்து வைக்கப்படலாம்.

(ஆ) இந்த ஒழுக்குவிதியின் (1) ஆம் பந்தியால், கைது செய்யும்படி அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஆளும், இப்பந்தியின் (அ) என்னும் உப்பந்தியால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தைக் கையாளவும், அந்த நோக்கங்களுக்குத் தேவையான அத்தகைய எல்லா வலோற்காரங்களையும் (ஆயுதப் படையுட்பட) பயன்படுத்தவும் உரிமையுடையராதல் வேண்டும்.

(இ) இப்பந்தியின் (அ) என்னும் உப்பந்தியின் ஏற்பாடுகளைப் பின்பற்றித் தடுப்புக் காவலில் வைக்கப்படும் எந்த ஆளும் சட்டப்படியான கட்டுக்காவலிலிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதோடு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அதிகாரமளிக்கும் அத்தகைய இடத்தில் அவருடைய கட்டளைக்கிணங்க தடுத்துவைக்கப்படவும் வேண்டும்; அத்தகைய இடம் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறைச்சாலையாயின் அத்தகைய கைதியைக் கையேற்று அவரைத் தடுப்புக் காவலில் வைத்தல் அச்சிறைச்சாலைப் பொறுப்புத்தியோகத்தரின் கடமையாதல் வேண்டும். அத். 54.

19 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்க் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பான சிறப்பேற்பாடுகள்.

20. (1) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 85 (5), 85 (6), 91(2) ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் 19 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட ஆட்கள் தொடர்பாக ஏற்புடையனவாதல் ஆகாது.

(2) 19 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, பொலிசுப் பரிசோதகர் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எந்த ஆளும், அந்த ஆள் அந்த ஒழுங்குவிதியின் கீழ்க் கைதுசெய்யப்பட்ட நாளில் இருந்து கணக்கிடப்படும் பதினைந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு அவ்வாறு தடுத்துவைக்கப்படலாம்; மேலும் அத்தகைய ஆள் அத்தகைய காலம் முடிவடைதற்கு முன்னர் அத்தகைய உத்தியோகத்தரால் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்டாலொழிய அத்தகைய காலமுடிவில் அத்தகைய ஆளை அத்தகைய உத்தியோகத்தர் விடுதலை செய்தல் வேண்டும்.

(3) 19 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றிக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றம் ஒன்றின்முன் (2) ஆம் பந்தியிற் குறிப்பிடு செய்யப்படும் உத்தியோகத்தராற் கொண்டுவரப்பட்டவிடத்து, அத்தகைய நீதிமன்றம் அவர் மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒரு மறியலின் கண்காணிப்பாளரின் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடல் வேண்டும்.

கட்டுக்காவலிலுள்ள ஆட்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்.

20அ. (1) நீதவானொருவரின் கட்டளையின் மேல் ஏதேனும் சிறைச்சாலையில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளவரும், வெடிப்பொருட் சட்டம், 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கத் தீங்குவிளைக்கும் ஆயுதங்கள் சட்டம், சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டம், அல்லது தண்டச் சட்டக்கோவையின் VI ஆம் அல்லது VII ஆம் அத்தியாயத்தின் கீழான அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றுக்காகச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவருமான ஆள் எவரும், நீதியமைச்சின் செயலாளரால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மீது அவர் விடுவிக்கப்படும்வரை அத்தகைய கட்டுக்காவலில் தொடர்ந்திருந்துவருதல் வேண்டும். அத். 182. அத். 183. அத். 19.

(2) அத்தகைய ஆள் ஏதேனும் தேதியன்று நீதிவானொருவர் முன்னிலையில் கொணரப்படவேண்டுமென்று நீதிவானொருவரால் ஆக்கப்பட்ட கட்டளை எது எவ்விதமிருப்பினும், (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

(3) ஒராம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஆட்கள் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அத்தகைய சிறைச்சாலையில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆட்கள் எல்லோரதும் நிரலொன்றை, அச்சிறைச்சாலை எந்நீதிவானின் நியாயதிக்கத்துள் அமைந்துள்ளதோ அந்நீதிவானுக்குக் காலத்துக்குக் காலம் கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) நீதிவான், (3) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலைப் பெற்றதன் மேல், பதினான்கு நாட்களுக்கு மேற்படாத கால இடைவெளிகளில் அத்தகைய சிறைச்சாலைக்குச் சென்றுவருதல் வேண்டுமென்பதோடு அச்சிறைச்சாலையில் தட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள எவரேனுமாளினால் அவருக்குச் செய்யப்படக்கூடிய எவையேனும் முறையீடுகளைப் பதிவு செய்தலும் வேண்டும்.

(5) நீதிவான், (4) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்டிருக்கக்கூடிய எவையேனும் முறையீடுகளைப் பதிந்துகொள்ளுதல் வேண்டுமென்பதோடு அத்தகைய பதிவினை, அம்முறையீடுகள் பற்றி அவர் செய்யக்கூடிய எவையேனும் குறிப்புரைகளுடன் சேர்த்து நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

சரணடையும் ஆட்களின் கட்டுக் காப்பு.
அத். 182.
அத். 183.
அத். 19.

20ஆ. (1) வெடிப்பொருட்கள் சட்டம், 1966 இன் 18 ஆம் இலக்கத் தீங்குவிளைக்கும் ஆயுதங்கள் சட்டம், சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டம் அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் கீழ், அல்லது VII ஆம் அத்தியாயத்தின் கீழான அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் அல்லது இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை அல்லது இலங்கை வான்படையின் எவரேனும் அலுவலரிடம் அல்லது எவரேனும் அரச அலுவலரிடம் சரணடையும் எவரேனும் ஆள், அத்தகைய சரணடைந்த ஏழு நாட்களுக்குள் அத்தகைய அலுவலரால் சிறைச்சாலை ஆணையாளரின் கட்டுக்காப்பிற்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் பந்தியின் கீழ் சிறைச்சாலை ஆணையாளரின் கட்டுக்காப்பிற்குக் கையளிக்கப்பட்ட ஒவ்வோராளும், அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதி வலுவுடையதாய் வருமுன்னர் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் எவரேனும் அலுவலரிடம் சரணடைந்தவரும் சிறைச்சாலை ஆணையாளரின் கட்டுக்காவலிலுள்ளவருமான ஒவ்வோராளும்,

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட விதிகளின் நோக்கங்களுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்படாத சிறைக் கைதியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, நீதியமைச்சின் செயலாளரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மீது அத்தகைய ஆள் விடுவிக்கப்படும்வரை சிறைச்சாலை ஆணையாளரின் கட்டுக்காப்பில் தொடர்ந்திருந்துவருதல் வேண்டும்.

சிறைச்சாலைகள், சிறைக் கைதிகள் தொடர்பில் எவையேனும் சட்ட முறையான கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு ஆயுதந்தாங்கிய படையுறுப்பினர்க்குள்ள உரிமை.

20இ. எவரேனும் சிறைக் கைதியைக் காவலில் எடுத்துச்செல்வதில், அல்லது ஏதேனும் சிறைச்சாலையை அல்லது சிறைக்கைதிகள் மறித்துவைத்திருக்கப்படுகின்ற அல்லது வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிற ஏதேனும் வேறு இடத்தைக் காவல் புரிவதில், அல்லது எவரேனும் சிறைக்கைதிகளினால் உண்டாக்கப்படும் ஏதேனும் குழப்பத்தை அல்லது வலோத்காரத்தைத் தணிக்க உதவி செய்வதில் அல்லது தப்பியோடிச் செல்லும் எவரேனும் சிறைக் கைதியைத் திரும்பவும் கைது செய்வதில், அல்லது ஏதேனும் சட்டமுறையான கட்டளையை வலுவுறுத்துவதில் அல்லது வலுவுறுத்த உதவி செய்வதில் அக்காலத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, அல்லது இலங்கை வான்படையுறுப்பினர் ஒவ்வொருவரும், சிசைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 77 (5) ஆம் பிரிவினாலும் அதன் கீழாக்கப்பட்ட விதிகளினாலும் பொலிசு அலுவலர் ஒருவருக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் உரிமைகளையும் உடையவராகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் 5—தவறுகளும் தண்டனைகளும்

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதி முதலியன.

21. (அ) சட்டப்படியல்லாத வேறு வழிகளில் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தை வீழ்த்தச் சதிசெய்யும், அல்லது வீழ்த்த எத்தனிக்கும் அல்லது வீழ்த்த முன்னேற்பாடு செய்யும், அல்லது வீழ்த்தக் கருதப்படும் அல்லது வீழ்த்தும் குறிக்கோளுடன் அல்லது வீழ்த்தும் வழியொன்றாக ஏதேனும் செயலைச் செய்யும் அல்லது ஏதேனும் செயலைச் செய்யச் சதிசெய்யும் அல்லது செய்ய எத்தனிக்கும் அல்லது முன்னேற்பாடு செய்யும் ஆளெவரும் அல்லது

(ஆ) சனாதிபதி அல்லது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் அல்லது பொலிசு உறுப்பினர், அல்லது ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர், அல்லது ஓர் அரச அலுவலர், சனாதிபதியின் அத்தகைய தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் அல்லது பொலிசு உறுப்பினரின், அல்லது ஆயுதந் தாங்கிய படைகளின் ஓர் உறுப்பினரின் அல்லது அரச அலுவலரின் சட்டப்படியான எவையேனும் தத்துவங்களை எவ்வகையிலேனும் பிரயோகிக்க அல்லது பிரயோகிக்காதுவிட, விடயத்துக்கேற்ப, சனாதிபதியை, அல்லது தேசிய அரசுப் பேரவையின் அத்தகைய உறுப்பினரை அல்லது பொலிசு உறுப்பினரை அல்லது ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினரை அல்லது அரச அலுவலரைத் தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் கருத்துடன் சனாதிபதியை, அல்லது தேசிய அரசுப் பேரவை உறுப்பினரை அல்லது பொலிசு உறுப்பினரை அல்லது ஆயுதந் தாங்கிய படைகளினுறுப்பினரை அல்லது அரச அலுவலரைக் கொலை செய்யச் சதி புரியும் அல்லது கொலை செய்ய எத்தனிக்கும் அல்லது முறைகேடாக அடைத்து வைக்கும் அல்லது முறைகேடாக அடைத்து வைக்கச் சதி செய்யும் அல்லது எத்தனிக்கும் அல்லது முன்னேற்பாடு செய்யும் எவரும், அல்லது

(இ) இலங்கை அரசாங்கம், சனுதிபதி, தேசிய அரசுப் பேரவை உறுப்பினர், பொலிசு உறுப்பினர், ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது அரச அலுவலர் அதனது அல்லது அவரது சட்டமுறையான எவையேனும் தத்துவங்களை எவ் வகையிலேனும் பிரயோகிக்க அல்லது பிரயோகிக்காது விட இலங்கை அரசாங் கத்தை, சனுதிபதியை, தேசிய அரசுப் பேரவையின் அத்தகைய உறுப்பினரை, பொலிசு உறுப்பினரை, ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரை அல்லது அரச அலுவலரைத் தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் கருத்துடன் ஆளெவ ரையும் பயமுறுத்திப் பணிய வைக்கும், தம் செல்வாக்குக்குட்படுத்தும் அல்லது வலிந்து நெருங்கும், அல்லது பயமுறுத்திப் பணிய வைக்க அல்லது செல்வாக்குக் குட்படுத்த அல்லது வலிந்து நெருக்க முன்னேற்பாடு செய்யும், சதி செய்யும் அல்லது எத்தனிக்கும் எவரும்—

தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, வேறெச் சட்டத்தில் எது எவ்விதமிருப் பினும், மேல்நீதிமன்றத்தின் முன்னர் குற்றவாளியாகக் காணப்பட்டதும், சாத்தண்டனை பெறுதல் வேண்டும் அல்லது இருபதாண்டுகட்கு மிகாத ஒரு காலத்துக்குக் கடூழிய மறியற்றண்டனை பெறுதல் வேண்டும் என்பதோடு அவரது ஆதனங்கள் அனைத்தையும் இழத்தலும் வேண்டும்.

22. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் ஏதேனும் இலங்கைப் பிரதேசத்தில்— தீயிடல், கொள்ளை, அத்துமீறல் முதலியன.

(அ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்க பொருள் ஏதேனும் வெடிபொருள் அல்லது எரிபதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் வகையைச் சேர்ந்த கருவியின் உதவியோடு அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது உள்ளூரதிகார சபைக்குச் சேர்ந்த அல்லது தனி ஆளுக்குச் சேர்ந்த அல்லது ஏதேனும் ஆட்சிக் குழுவுக்குச் சேர்ந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு அழிவை அல்லது கெடுதியை விளைவிக்கும் ஏதேனும் செயலை அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமானத்தை அல்லது பயன்பாட்டை அழிக்கக்கூடிய அல்லது குறைக்கக்கூடிய ஏதேனும் மாறுதல்களை அதிலாக்கும் ஏதேனும் செயலைச் செய்யும்; அல்லது

(அஅ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்க பொருள் அல்லது ஏதேனும் வெடி பொருள் அல்லது எரிபதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் வகையைச் சார்ந்த கருவியின் உதவியோடு வேறு யாரேனும் ஆளுக்குச் சாவை அல்லது காயத்தை விளைவிக்கும் அல்லது விளைவிக்க முயலும் அல்லது

(ஆ) குடியிருப்பில்லாமல் அல்லது பாதுகாப்பில்லாமல் விடப்பட்ட ஏதேனும் வளவிற்குள் உள்ள ஏதேனும் பொருளைக் களவாடும் ; அல்லது

(இ) அத்தியாவசிய சேவைகளைப் புரிதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் வாகனத்தின், பொறித் தொகுதியின், உபகரணத் தின் அல்லது வேறு பொருளின் திறமையை ஏதேனும் ஒரு செயல் குறைக்கு மென்னும் அல்லது தடைசெய்யுமென்னும் அல்லது மேற்சொன்னவாறு பயன் படுத்தப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் வேலையின் அமைப்பின் அல்லது வளவின் பயனை அச்செயல் பழுதுபடுத்துமென்னும் நோக் கத்தோடு அல்லது அச்செயல் மேற்சொன்னவாறு செய்யுமென்று தெரிந்தும் அல்லது அவ்வாறு செய்யக்கூடுமென்று நம்பக்கூடிய காரணம் இருந்தும் அச் செயலைச் செய்யும் ; அல்லது

(ஈ) தண்டவியற் சட்டக்கோவையில் 427 ஆம் பிரிவு தொடங்கி 446 ஆம் பிரிவு வரை யிலுள்ள பிரிவுகளின் ஏதேனும் ஒன்றின் கீழான குற்றமெதனையாவது செய்யும் அல்லது ஏதேனும் வளவிலிருந்து ஏதேனும் சாமானை அல்லது பொருளைச் சட்ட விரோதமாக அகற்றிச் செல்லும் அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கும் ; அல்லது அத். 19.

(உ) முற்போந்த உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைச் செய்தல் அவ்வாட்கூட்டத்தின் நோக்கமாகவுள்ள தண்டவியற் சட்டக்கோவையின் 138 ஆம் பிரிவின் வரைவிலக்கணம் கூறப்படும் ஆட்கூட்டமொன்றின் உறுப்பினரொரு வராய் உள்ள அத். 19.

எவரும் தண்டவியற் சட்டக்கோவையில் அல்லது இவ்வொழுங்குவிதிகளில் எது எவ்வாறிருப்பினும், குற்றமொன்றைப் புரிந்தவராகி மேல் நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தூக்குத் தண்டனைக்கு அல்லது இரு வகை மறியலிலொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

(2) (ஆதனத்தைப் பாதுகாத்தற்குத் தனியாளுக்கிருக்கும் உரிமை சம்பந்தமாகவும், அத் தகைய உரிமைகளைப் பிரயோகித்தலில், தீங்கிழைக்கும் ஒருவருக்குச் சாவை அல்லது வேறேதேனும் துன்பத்தை எந்தச் சூழ்நிலைகளில் செய்யலாம் என்பதை விதிப்பதுமான) தண்டவியற் சட்டக் கோவையின் 96 ஆம் பிரிவு பின்வருவன அப்பிரிவின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருந்தாற் போன்று பயனுடையதாதல் வேண்டும் : அத். 19.

" ஐந்தாவதாக—அவசரகால (நானாவித ஏற்பாடுகள், தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளின் 22 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றம் "

(3) இவ்வொழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றத்திற்கான வழக்குத் தொடர்கை யொன்றுக்கான இவ்வொழுங்குவிதிகளின் 58 ஆம் ஒழுங்குவிதியின் கீழான, சட்டத்துறைத் தலைமை யதிபதியின் எழுத்துமூல அனுமதியானது, அக்குற்றம் செய்யப்படுகின்ற நேரத்தில் அல்லது நேர மளவில் நிலவிய உண்ணாட்டுக் குழப்பத்தை விரிவாக்கும் நோக்கத்தோடு, அல்லது அது தொடர்பாக அல்லது அதன் போது அக்குற்றம் செய்யப்பட்டதென்று சட்டத்துறை தலைமையதிபதி திருப்திப்படு மிடத்து வழங்கப்படுதல் கூடும்.

**வெறுப்பு ஏற்படு த்தலைத் தடுத்தல்.**

23. எந்த ஆளும்—

(அ) (i) அரச அலுவலர்கள் ; அல்லது

(ii) குடியரசின் சேவையில் ஈடுபட்டுள்ளவர் ; அல்லது

(iii) அத்தியாவசிய சேவைகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளவர்

என்போர்க்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தவோ ;

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள யாரேனுமொருவரை, அத் தகையவர் அரச அலுவலர் என்ற முறையில், அல்லது விடயத்திற்கேற்ப, அவ்விதம் ஈடுபட்டிருக்கும் ஆள் என்ற முறையில் அவர் செய்யவேண்டிய கடமையினின்றும் தவறும் வண்ணம் எதனையும் செய்யும்படி அல்லது செய்யாது விடும்படி ஊக்கமுயலவோ ; அல்லது

(இ) (அ) என்னும் உட்பிரிவை அல்லது (ஆ) என்னும் உட்பிரிவை மீறும் உட்கருத்தோடு அல்லது மீறுகைக்கு உதவி செய்யும், துணை செய்யும், அல்லது அறிவுரை கூறும் உட்கருத்தோடு, தன்னுடைய ஆட்சியில் அல்லது தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் மேற்குறித்த அத்தகைய எவரேனும் ஆட்களுக்கு அத்தகைய பத்திரத்தின் படி களைப் பகிர்வு செய்தல் அத்தகைய மீறுகையாக அமையக்கூடிய அத்தகைய ஏதேனும் பத்திரத்தை வைத்திருக்கவோ ;

கூடாது.

**அரசின்மேற் பகை விளைப்பதும் கிளர்ச்சி செய்தலும்.**

24. சொல்லால், (பேசப்பட்ட சொல்லாயினுஞ் சரி—எழுதப்பட்ட சொல்லாயினுஞ் சரி) அல்லது குறிகளால் அல்லது பார்க்கக்கூடிய சைகைகளால், அல்லது நடத்தையால் அல்லது வேறேதேனும் செய்கையால்—

(அ) சனாதிபதியை அல்லது அரசாங்கத்தைப் பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்கும் அல்லது பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்க முயலும், அல்லது சனாதிபதிக்கு அல்லது அரசாங்கத்துக்கெதிராக வெறுப்புணர்ச்சியை அல்லது பகையுணர்ச்சியை அல்லது இழிவுணர்ச்சியைத் தூண்டிவிடும் அல்லது ஏற்படுத்தும் அல்லது தூண்ட முயலும், அல்லது ஏவ முயலும் ; அல்லது

(ஆ) இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தை அல்லது நீதி நிருவாகத்தைப் பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்கும் அல்லது பகைமைக்கு அல்லது இழிவுக்குள்ளாக்க முயலும் அல்லது இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தை அல்லது நீதி நிருவாகத்தை வெறுக்கச் செய்யத்தக்கதான அல்லது இழிக்கச் செய்யத்தக்கதான உணர்ச்சியைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும் ; அல்லது

(இ) சட்டப்படி நிறுவப்பட்ட ஏதேனும் விடயத்தைச் சட்டப்படியல்லாத வேறு வழிகளால் மாற்றிப் பெறும்படிக்கு இலங்கை வாழ் மக்களை அல்லது அவர்களில் ஏதேனு மொரு பகுதியினரை அல்லது வகுப்பினரை அல்லது தொகுதியினரைத் தூண் டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும் ; அல்லது

(ஈ) இலங்கை வாழ் மக்களுக்கிடையில் அல்லது அவர்களில் ஏதேனுமொரு பகுதியினருக் கிடையில் அல்லது வகுப்பாருக்கிடையில் அல்லது தொகுதியினருக்கிடையில் திருப்தி யின்மையை அல்லது வெறுப்பை உண்டாக்கும் அல்லது ஏற்படுத்தும் அல்லது உண்டாக்க முயலும் அல்லது ஏற்படுத்த முயலும் ; அல்லது

(உ) இலங்கை வாழ் குடிகளின் வெவ்வேறு பிரிவினர்க்கிடையில் அல்லது வகுப்பினர்க் கிடையில் அல்லது கூட்டத்தார்க்கிடையில் வெறுப்புணர்ச்சியை அல்லது எதிர்ப் புணர்ச்சியை எழுப்பும் அல்லது வளர்க்கும் அல்லது எழுப்ப முயலும் அல்லது வளர்க்க முயலும் ; அல்லது

(ஊ) சட்டப்படி நிறுவப்பட்ட ஏதேனும் விடயத்தை மாற்றும்படி அல்லது ஏதேனும் செய்கையை அல்லது அலுவல்களைச் செய்யும்படி அல்லது தவிர்க்கும்படி தேசிய அரசுப் பேரவையை அல்லது அரசாங்கத்தைத் தூண்டும் அல்லது வற்புறுத்தும் நோக்கத்திற்காக, ஏதேனும் வகையான உடல் வலிமையை அல்லது பலாத்காரத்தினைப் பயன்படுத்தும்படி, அமைதியை மீறும்படி, சட்டத்தைப் பணியாதிருக்கும்படி, அல்லது சட்டம் தொழிற்படுவதைத் தடுக்கும்படி இலங்கை வாழ் மக்களை அல்லது அவர்களிலொரு பிரிவினரை அல்லது வகுப்பினரை அல்லது கூட்டத்தினரைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும் ; அல்லது

(எ) ஏதேனும் அவ்சரகால ஒழுங்குவிதியை மீறுவதாக அமையக்கூடிய ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்யும்படி அல்லது செய்யாது விடும்படி இலங்கை வாழ் மக்களை அல்லது அவர்களில் யாரேனும் பிரிவினரை அல்லது வகுப்பினரை அல்லது கூட்டத்தினரைத் தூண்டும் அல்லது ஏவும் அல்லது தூண்ட முயலும் அல்லது ஏவ முயலும்,

எவரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகிக் குறைந்தது மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடியதும், கூடியது இருபதாண்டுகளுக்கு மேற்படாததுமான கடூழிய மறியலினால் தண்டிக்கப்படக் கடவர் ; அத்துடன் குற்றப் பணம் ஒன்றும் விதிக்கப்படலாம்.

25. சொற்களின் மூலம் பேசப்பட்டிருப்பினுஞ்சரி எழுதப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது சைகைகள் மூலம் அல்லது காணக்கூடிய காட்சிகள் மூலம், அல்லது நடத்தை மூலம் அல்லது வேறேதேனும் செயல் மூலம், சட்டப்படி தாபிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தை, சட்டவழியல்லாத வேறு வழியில் வீழ்த்த வேண்டியதன் அல்லது வெல்ல வேண்டியதன் தேவை, கடமை அல்லது அவசியம் பற்றி நேரடியாக அல்லது மறைமுகமாக எடுத்துரைக்கும், தூண்டும் அல்லது ஆலோசனை கூறும் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சுலோகங்களை வெளிக்காட்டல்.

26. (1) ஆளெவரும், கட்டளைமூலம் முதலமைச்சரினால் குறிக்கப்படும் இலங்கையிலுள்ள இடப்பரப்பெதிலும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலரின் அனுமதியின்றி, எவையேனும் சுவரொட்டிகளை அல்லது துண்டுப் பிரசுரங்களை அல்லது சிற்றிதழ்களைப் பொதுமக்கள் பார்க்கக்கூடிய ஏதேனுமிடத்தில் ஒட்டுதலோ அல்லது பொதுமக்களிடையே விநியோகித்தலோவாகாது.

துண்டுத்தாள் முதலியனவற்றை பரப்புதல்.

ஆயின், எப்படியிருப்பினும், பெயர் குறிக்கும் நாளன்று தொடங்குகின்றதும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பொன்று எடுக்கப்படும் நாளுக்குப் பின்னரான நாளன்று முடிவடைகின்றதுமான காலத்தின்போது, இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் கீழான ஏதேனும் தேர்தலில் வேட்பாளரெவரினதும் தேர்தலை ஊக்குவிக்கும் நோக்கத்துக்காகச் சுவரொட்டிகளை, துண்டுப் பிரசுரங்களை அல்லது சிற்றிதழ்களை ஒட்டுதலுக்கு அல்லது விநியோகித்தலுக்கு, அத்தகைய ஒட்டுகை அல்லது விநியோகம் மேற்சொல்லப்பட்ட அரசப் பேரவைக்கட்டளையின் கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கும் அளவுக்கு, இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆளொருவரால் புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றமொன்று தொடர்பான எந்த நடவடிக்கையிலும் அத்தகைய ஆள், பொது மக்கள் காணக்கூடிய ஏதேனும் இடத்தில் ஏதேனும் சுவரொட்டியை அல்லது விளம்பரத் துண்டை அல்லது துண்டுத்தாளை ஒட்ட அல்லது பொது மக்கள் மத்தியில் அவற்றை பகிரப பொலிசுப் பரிசோதகர் தலைவரிடம் இருந்து அல்லது அது சார்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு உத்தியோகத்தரிடமிருந்து அனுமதி பெறவில்லை என்று கூறுவதான, பொலிசுப் பரிசோதகர் தலைவர் கைப்பட்ட சான்றிதழ், பொலிசுப் பரிசோதகர் தலைவரின கையெழுத்துப் பற்றிய மெய்ப்பிப்பு இல்லாமலே சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் ; அத்தகைய சான்றிதழிற் கூறப்பட்டிருக்கும் நிகழ்வுகளுக்கு இதுவே முதற்றோற்றமான சான்றுமாதல் வேண்டும்.

27. ஆளெவரும் வாய்மொழி மூலமாகவோ எத்தகையனவுமான வேறெவையேனும் வழிகள் மூலமாகவோ, பொதுமக்களுக்கிடையில் பயத்தை ஏற்படுத்தும் அல்லது பொதுமக்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் சாத்தியமுடைய வதந்தி அல்லது பொய்யான கூற்று எதனையும் தெரிவித்தலோ பரப்புதலோ ஆகாது.

வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல்.

27அ. பின்வரும் கருமங்களான—

(அ) 68 ஆம் ஒழுங்குவிதியின் தடைசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் செயற்பாடுகள் ;

(ஆ) பயங்கரவாத இயக்கம் பற்றி அரசாங்கத்தினால் கொண்டு நடாத்தப்பட்ட புலன் விசாரணைகள் தொடர்பான ஏதேனும் கருமம் ;

(இ) பொலிசு, இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான் படை ஆகியவற்றின் பகிர்வு, நிலைமை, நடமாட்டம் அல்லது தொழிற்பாடுகள் ;

(ஈ) இலங்கையின் பாதுகாப்புடனும் ஏமத்துடனும் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம் ;

(உ) நேரடியாகவோ மறைமுகமாகவோ வகுப்புவாத அமைதியின்மையை உருவாக்கக் கூடிய ஏதேனும் கருமம் ;

ஆகியனவற்றுள் எவையேனும் பற்றிய ஏதேனும் ஆவணத்தை அச்சிடும் அல்லது வெளியிடும் அல்லது தகவலைக் கொடுக்கும் அல்லது அதுபற்றி விமர்சிக்கும் அல்லது ஏதேனும் படக்குறிப்பு, ஒளிப்படம் அல்லது இயக்கப்படக் காட்சியை வெளியிடும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

இலவகையான ஆவணங்களை அச்சிடுதல் அல்லது வெளியிடுதல்.

ஆயின், எவ்வாறுயினும், இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகள் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது 1972 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கக் குற்றவியல் நீதி ஆணைக் குழுக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் முன்னரான ஏதேனும் நடவடிக்கைகளுக்கு அல்லது அத்தகைய ஏதேனும் நடவடிக்கைகளை அச்சிடுதலுக்கு அல்லது வெளியிடுதலுக்கு ஏற்புடையதாகாது.

*பொய்யான கூற்றுக்கள்.*

28. எந்தவோராளும்—

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு விடையளிக்கும்போது முக்கியமான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றைக் கூறினால் அல்லது தகவலைத் தெரிவித்தால் ; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி கேட்கப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுத்தல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறேதேனும் பத்திரம் என்பவற்றில் மேற்சொன்ன மாதிரியான கூற்றைக் கூறினால்,

ஒரு குற்றஞ் செய்தமைக்காக அவர் குற்றவாளியாதல் வேண்டும்.

*தேசப்படம் முதலியவற்றை தம்வசம் வைத்திருத்தல்.*

29. சட்டப்படியான சமாதானமின்றி (இதை நிரூபித்தல் அத்தகைய ஆளைச் சாரும்) அரசாங்கக் கூட்டுத்தாபனம் உட்பட அரசாங்கத்தின் ஏதேனும் அலுவலகம் அமைப்பு நிறுவனம் அல்லது தாபனத்தின் அல்லது பொலிசு உறுப்பினரின் அல்லது ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினரின் படையணி விரிவு பற்றிய அல்லது ஒழுங்கமைதி பற்றிய, அல்லது இடம்பெயர்க்கும் சேவைகள் பற்றிய அல்லது பொலிசுக்கும் ஆயுதந்தாங்கிய படைகளுக்கும் உரியதான எவையேனும் படைக்கலங்கள் அல்லது படைத்தளவாடம் பற்றிய அல்லது அவை தொடர்பான ஏதேனும் படத்தை, திட்டப்படத்தை, வரைபடத்தை, கீறுபடத்தை அல்லது கோட்டுப்படத்தை அல்லது வேறு விபரங்களைச் சம்பாதித்துத்தரும், அல்லது தமது கட்டுக்காவலில் அல்லது தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அல்லது தமது உடைமையில் வைத்திருக்கும் அல்லது சம்பாதித்துத்தர எத்தனிக்கும் அல்லது தமது உடைமையில் வைத்திருக்க எத்தனிக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*கிளர்ச்சியூட்டும் எழுத்துக்களை வைத்திருத்தல்.*

30. ஆளொருவர், சட்டப்படியான அதிகாரமின்றி அல்லது நியாயமான சமாதானமின்றி (இதை நிரூபித்தல் அத்தகைய ஆளைச் சார்ந்தது) பொதுமக்களின் அமைதியின் நலன்களுக்கு அல்லது பொது அமைதியைப் பேணுவதற்குப் பாதகமாக இருக்கக்கூடிய அல்லது அரசாங்கத்தின் மீது வெறுப் புணர்ச்சியை அல்லது அவமதிப்பைக் கிளறிவிட அல்லது தூண்டிவிட அல்லது ஊக்கிவிடக்கூடிய, அல்லது அரசாங்கத்தை வீழ்த்தற்கான ஏதேனும் நடவடிக்கை எடுக்கும்வண்ணம் எவரேனும் ஆளை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக முடுக்கிவிடக்கூடிய ஏதேனும் எழுத்தை, அல்லது குறிப்பைக் கொண்ட ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது பத்திரிகையைத் தமது உடைமையில் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பின் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*படைக்கலங்கள் முதலியவற்றை சேர்த்தல்.*

31. படைக்கலங்களை, படைத்தளவாடங்களை, வெடிப் பொருள்களை, ஆயுதங்களை அல்லது வேறு அபாயகரமான பொருள்களை அல்லது பதார்த்தங்களைச் சேகரிக்கும், அல்லது அத்தகைய படைக்கலங்கள், படைத் தளபாடங்கள், வெடிப்பொருள்கள், ஆயுதங்கள் அல்லது அபாயகரமான பொருள்கள் அல்லது பதார்த்தங்களை உற்பத்தி செய்வதில் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதில் எவரேனும் ஆளைத் தயார் படுத்தும் அல்லது ஆளுக்குப் பயிற்சியளிக்கும் அல்லது பயிற்சியளிக்க எத்தனிக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*சீருடைபோன்ற உடைகளையணிதல்.*

32. ஆயுதந் தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப்படையின் உறுப்பினராயிராமல், ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப்படையின் எவரேனும் உறுப்பினரால் அணியப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஆடை, உடை, சீருடை, அடையாளச் சீட்டு நினைவுப்பொருள் அல்லது அடையாளத்தை ஏதேனும் விதத்தில் அல்லது ஏதேனும் விபரத்தில் ஒத்திருக்கும் ஏதேனும் ஆடையை, உடையை, சீருடையை, அடையாளச் சீட்டை, நினைவுப்பொருளை அல்லது அடையாளத்தை அணியும் அல்லது அவற்றின் கட்டுக்காப்பை அல்லது கட்டுப்பாட்டைத் தம்முடைமையில் வைத்திருக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*வெடிப்பொருள்கள், தீங்கு விளைக்கும் ஆயுதங்கள், தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் என்பன.*

33. (1) முதலமைச்சரினால் கட்டளைமூலம் குறிக்கப்படும் இலங்கையிலுள்ள ஏதேனும் இடப் பரப்பில், சட்ட முறையான அதிகாரமோ நியாயமான காரணமோவின்றி (அதற்கான எண்பிப்பு அத்தகைய ஆளின் மேலதாதல் வேண்டும்) எவையேனும் வெடிப்பொருள்களை, தீங்கு விளைக்கும் ஆயுதத்தை அல்லது தீங்கு விளைக்கும் பதார்த்தத்தை இடம்பெயர்க்கும் அல்லது இடம்பெயர்ப்பிக்கும், அல்லது இவற்றைத் தனதுடைமையில் அல்லது தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலரொருவர், கோப்போரல் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கைத் தரைப்படை உறுப்பினரொருவர், முதன்மைக் கடலோடிப் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கைக் கடற்படை உறுப்பினரொருவர் அல்லது வான்படைக் கோப்போரல் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கை வான்படை உறுபபினரொருவர், எவ்வாள் இவ்வொழுங்கு விதியின்கீழ்த் தவறொன்றைப் புரிகின்றாரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணமுள்ளதோ, அவ்வாளின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் வெடிப்பொருளை தீங்கு விளைக்கும் ஆயுதத்தை அல்லது தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தை அவ்வாளிடமிருந்து அகற்றலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழான தவறொன்றுக்கு எவரேனுமாளுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப் படுமிடத்து, தவறு புரிவது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஊர்தி அல்லது கலம், குடியரசுக்கு இறப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரியும் எவரேனுமாள், நீதிவானொருவரினால் விளங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐந்தாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியல், குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியில்—

"தீங்குவிளைக்கும் பதார்த்தம்" என்பது, தீப்பற்றக்கூடிய, அரிக்கக்கூடிய அல்லது விரைவில் ஆவியாகக்கூடிய ஏதேனும் பதார்த்தம் எனப் பொருளாகும்: அத்துடன்

"தீங்குவிளைக்கும் ஆயுதம்" என்பது, வெடிகுண்டு அல்லது எறிகுண்டு ஒன்றென, அல்லது வெடிகுண்டு அல்லது எறிகுண்டு ஒன்றன் பயன்பாட்டைப் போன்ற அல்லது நோக்கத்தைப் போன்ற அதே பயன்பாட்டுக்காக அல்லது நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட அல்லது கருதப்பட்ட வேறேதேனும் உபாயம் அல்லது பொறி அமைவு என, அல்லது ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு ஊறுவிளைவிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஏதேனும் உபகரணம் எனப்பொருளாவதோடு, அத்தகைய வெடிகுண்டின், எறிகுண்டின், உபாயத்தின் அல்லது பொறி அமைவின் பாகமாக அமையக்கூடிய ஏதேனும் வஸ்துவையும் அல்லது பதார்த்தத்தையும் உள்ளடக்கும்.

(6) சுடுபடைக்கலன்கள் கட்டளைச்சட்டத்தின் எது எவ்விதமிருப்பினும், முதலமைச்சரினால் கட்டளைமூலம் குறிக்கப்படும் இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பில் உரிமமில்லாத துவக்குக்ளைக் கட்டுக்காப்பில் வைத்திருத்தல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல் தொடர்பிலான அக்கட்டளைச் சட்டத்தின் 22 ம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியதன் காரணமாக அக்கட்டளைச் சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் எவரேனுமாள், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

கணைகளை எறிதல்.

34. முதலமைச்சராற் கட்டளையொன்றிற் குறிப்பிடப்படும் எந்தவோர் இலங்கையின் பிரதேசத்திலும், எந்த ஆளும், எஞ்சின், எரிபொருள் தாங்கிவண்டி, சாமான் பெட்டி, அல்லது வாகனம் என்பதற்குள் அல்லது என்பதன் மேல் உள்ள ஆள் எவருக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் ஏதேனும் புகைவண்டிப் பாதையில் அல்லது பொதுத் தெருவில் நிற்கும் எஞ்சின், எரிபொருள் தாங்கி வண்டி, சாமான்பெட்டி, அல்லது வாகனம் மேல் பொருளை அல்லது பதார்த்தத்தை எறிதல் கூடாது.

துவக்கு நீட்டல்.

35. (1) முதலமைச்சராற் கட்டளையொன்றிற் குறிப்பிடப்படும் எந்தவோர் இலங்கையின் பிரதேசத்திலும் வேறு எந்தவோர் ஆளின் மீதும் எந்தவோர் ஆளும் சட்டப்படியான சாக்கின்றித் தோட்டாவேற்றிய துவக்கையோ தோட்டவேற்றப்படாத துவக்கையோ நீட்டுதல் கூடாது.

மிரட்டல் முதலிய வற்றைத் தடுத்தல்.

36. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும், இலங்கையின் பிரதேசமெதிலும் எந்தவோராளும், வேறு யாரேனும் ஓர் ஆள் உறையும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக் கிட்ட அல்லது இடத்திற்குக் கிட்ட, அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள யாரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அப்படியான ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டில் இருந்து வெளிக்கிளம்புவதை தடைசெய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது.

(2) இவ்வொழுங்குவிதியின் "மிரட்டல்" என்ற சொல் ஓர் ஆளினது மனத்தில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள யாரேனும் உறுப்பினர்க்கு அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்கு தீங்கு விளைந்துவிடுமோ என்ற ஞாயமான ஐயவச்சத்தை ஆக்குதல் அல்லது யாரேனும் ஒருவருக்கு அல்லது ஆதனத்துக்கு தீங்கு விளைந்துவிடுமோ என்ற நியாயமான அச்சத்தை ஆக்குதல் என்று பொருள்படும்; "தீங்கு" என்ற சொல் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வேறு வருமானவாய்கள் தொடர்பான தீங்குகளை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய குற்றங்களையும் உள்ளடக்கும்.

அதிகாரம் பெற்ற ஆட்களை எதிர்த்தல் அல்லது தடுத்தல்.

37. ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியால் அல்லது அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஓராளிற்கு அளிக்கப்பட்ட அல்லது ஓராளின் மேற் சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அவர் நிறைவேற்றுவதை அல்லது ஊக்குவிப்பதை எந்த ஆளும் எதிர்க்கவோ தடுக்கவோ கூடாது.

அத்தியாவசிய சேவைகளைப் பேணிவருதல், தடை செய்தல் முதலியன

38. (1) ஒழுங்குவிதி 2 இன் கீழ் ஏதேனுமொரு சேவை அத்தியாவசியச் சேவையென சனாதிபதியால் ஆக்கப்படும் கட்டளையால் வெளிப்படுத்தப்பட்டவிடத்து, 1975 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் தேதியன்று அல்லது அத்தேதியின் பின்னர் அந்தச் சேவை தொடர்பான ஏதேனும் வேலையில் ஈடுபட்டிருந்த அல்லது வேலைக்கமர்த்தப்பட்டிருந்த எந்த ஆளும், அத்தகைய கட்டளை நடைமுறைக்கு வந்த தேதிக்குப் பின்னர் ஒரு நாட்கழிந்த பின்பு அவருடைய வேலை நிலையத்திற்கு அல்லது தொழில் நிலையத்திற்கு அல்லது அவரை வேலைக்கமர்த்தியவரால் அல்லது அவ்வேலைக் கமர்த்தியவரின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஒரு ஆளால் காலத்திற்குக் காலம் குறிக்கப்படும் அத்தகைய இடத்திற்குப் போகத் தவறின் அல்லது அத்தகைய கட்டளை நடைமுறைக்கு வந்த தேதிக்குப் பின்னர் ஒரு நாட்கழிந்த பின்பு வேலைக்கமர்த்தியவரால் அல்லது வேலைக்கமர்த்தியவரின் அதிகாரத்தின் கீழ்த் தொழிற்படும் ஆளால் பணிக்கப்படும் அத்தகைய வேலையைப் புரிவதற்குத்

தவறின் அல்லது மறுபபின், வேலே நிறுத்தக் காரணத்தை முன்னிட்டே அவர் அவ்வாறு சமுகயளித்தற்கு அல்லது வேலே செய்தற்குத் தவறினுர் அல்லது மறுத்தாரென்றிருந்தாலும், அவர்—

(அ) எல்லா நோக்கங்களுக்கும் அவரது தொழிலேத் துறந்தவராக அல்லது விட்டு நீங்கிய வராகக் கருதப்படுதல் வேண்டும்; இதற்கு முரணுக வேறெந்தச் சட்டத்திலும் அல்லது அவருடைய தொழில் தொடர்பாகச் செல்லுபடியாகக்கூடிய ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதி நிபந்தனேகளில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் மேல் மொழிந்ததே செல்லுபடியாதல் வேண்டும்; அன்றியும்

(ஆ) குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

"1அ. (i) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது 1973, திசெம்பர் 1 ஆந் தேதியன்று தொடங்கி 1975, மாச்சு 18 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலபபகுதியின்போது எந்நேரத்திலேனும் வலுவிலுள்ள ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் தமது வேலேயை விட்டு நீங்கியுள்ளவராக அல்லது முடிவுறுத்தியுள்ளவராகக் கருதப்படும் எவரேனும் ஆளுக்கும், அத்தகைய விட்டுநீங்குதல் அல்லது முடிவுறுத்தலுக்கு உடன் முன்னர் அவரது தொழில் தருநராகவிருந்த ஆளுக்கும் இடையில் விடயங்கள் பிணக்கிலுள்ளனவென ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, ஆணையாளர், அந்தப் பந்தியின ஏற்பாடுகள் அல்லது அந்த அவசரகால ஒழுங்குவிதி எவ்வாறிருப் பினும், அவர் உசிதமெனக் கருதக்கூடியவாறுன அத்தகைய விசாரணையின் பின்னர், அத்தகைய விடயங்கள் தொடர்பில் அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய விடயங்களோடு சம்பந்தப்பட்ட அல்லது அத்தகைய விடயங்களினின்று எழுகின்ற ஏதேனும் விடயம் தொர்பில், நீதியானதும் ஒப்புரவானதுமெனத் தனக்குத் தோன்றக்கூடியவாறுன அத்தகைய இடைக் காலக் கட்டளேயை ஆக்கலாம். தமது வேலேயை விட்டுநீங்கியுள்ளவராக அல்லது முடிவுறுத்தியுள்ளவராக அவ்வாறு கருதப்படும் ஆளே மீளவும் வேலேக்கு அமர்த்தும்படி மேற்கூறப்பட்ட தொழில்தருநரைப் பணிக்கும் கட்டளேயையும் அத்தகைய இடைக்காலக் கட்டளே உள்ளடக்கலாம்.

(ii) (iv) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விடயங்களேத் தீர்த்துவைக்கும் ஒரு கட்டளே அல்லது தீர்ப்பு ஆக்கபபடும்வரை (1) ஆம் உட்பந்தியின்கீழ் ஆக்கப் பட்ட இடைக்காலக் கட்டளே ஒவ்வொன்றும் பயனுடையதாயிருந்துவரல் வேண்டும்.

(iii) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் கைத்தொழில் நீதிமன்றமொன்றினுல் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பை வலுபபடுத்தல் தொடர்பானவையும், அத்தகைய ஏதேனும் தீர்ப்பின் நியதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து எடுக்கப் படற்பாலனவான நடவடிக்கைகள் தொடர்பானவையுமான கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் VI ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் (1) ஆம் உட்பந்தியின்கீழ் ஆக்கபபட்ட ஏதேனும் இடைக்காலக் கட்டளேக்கு இணங்கியொழுகத் தவறும் விடயத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும். (1) ஆம் உட்பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஓர் இடைக்காலக் கட்டளேயின் கீழ் மீளவும் வேலேக்கமர்த்தப்பட்ட ஆள் எவரும், அத்தகைய இடைக்காலக் கட்டளேயின் ஏற்பாடுகள் எவற்றுக்கும் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தமது வேலேயை விட்டுநீங்கியவராக அல்லது முடிவுறுத்தியவராகக் கருதப்படல்வேண்டும்.

(iv) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிலுள்ள அல்லது 1973 திசெம்பர் 1 ஆந் தேதியன்று தொடங்கி 1975, மாச்சு 18 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப் பகுதியின்போது எந்நேரத்திலேனும் வலுவிலுள்ள ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதியிலுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருபபினும், (1) ஆம் உட்பந்தியின் கீழான ஓர் இடைக்காலக் கட்டளே எவ்விடயங்கள் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அவ்விடயங் களே, அல்லது நேர்முகமாக அல்லது மறைமுகமாக, அவ்விடயங்களுடன் சம் பந்தப்பட்ட விடயங்களே அல்லது அவற்றினின்றெழுகின்ற எவையேனும் விடயங் களே தீர்த்துவைப்பதற்காக, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது அவற்றை நாடுவதற்கு எவரேனும் ஆள் அல்லது அதிகாரி தகுதியுடையவராதல் வேண்டும்.

(v) இந்தப் பந்தியில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினலன்றி "ஆணையாளர்" என்பதும் "தொழில்தருநர்" என்பதும் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில் உள்ளவாறு முறையே அப்பொருட்களேக் கொண்டதாதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 2 இன் கீழ் சனாதிபதியால் ஆக்கப்படும் கட்டளையின் மூலம் ஏதேனுமொரு சேவை அத்தியாவசிய சேவையென வெளிப்படுத்தப்பட்டவிடத்து—

(அ) எந்தவொரு விதத்திலும்—

(i) அந்தச் சேவையைத் தொடர்ந்து நடைபெறுவதனை இடையூறு செய்யும், தடை செய்யும், சுணக்கும் அல்லது குறைக்கும், அல்லது

(ii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுதலில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை வேலை செய்யுமிடத்திற்குச் சமுகம் தராதவாறு இடையூறு செய்யும், தடைசெய்யும், தடுக்கும் அல்லது

(iii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுதலில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை அவர் வேலை செய்யுமிடத்துக்குச் சமுகம் தராதிருக்குமாறு ஏவும், தூண்டும், அல்லது ஊக்கமளிக்கும், அல்லது

(iv) அரசாங்கத் திணைக்களத்தினது அல்லது அதன் கிளையினது சேவையாகவுள்ள ஏதேனுக்கும் பதிலாக அல்லது நிகரான ஏதேனும் வேறு சேவையை நிறுவும்படி அல்லது நிலைநாட்டும்படி வற்புறுத்தும், ஏவும், தூண்டும், அல்லது ஊக்கமளிக்கும், அல்லது

(v) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதற்காக ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை அவர் செய்துகொண்டிருக்கும் வேலையைக் கையளிக்கும்படி வற்புறுத்தும், ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அத்தகைய ஆள் சேவையைக் கையளித்தாலும் சரி கையளிக்காது விட்டாலும் சரி அல்லது விலகினாலும் சரி விலகாவிட்டாலும் சரி) அல்லது

(vi) அந்தச் சேவையை நடைபெறச் செய்தற்காக அல்லது அது தொடர்பாக யாரேனுமொருவர் தொழிலைக் கொடுத்தலை அல்லது ஏற்றலைத் தடை செய்யும் எந்த ஆளும் ; அல்லது

(ஆ) உடற்செயல் மூலம் அல்லது ஏதேனும் பேச்சு மூலம் அல்லது எழுத்து மூலம் வேறு யாரேனுமோராளை, இப்பந்தியின் உட்பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனுஞ் செயலைச் செய்யும்படி ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அவர் அத்தகைய செயலைச் செய்தாலும் சரி செய்யாது விட்டாலும் சரி) எந்த ஆளும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) யாரேனுமோராள், இவ்வொழுங்கு விதிக்கெதிரான ஏதேனுமொரு குற்றத்திற்காக ஏதேனுமொரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, அத்தகைய குற்றத்திற்காக நீதிமன்றம் சுமத்தும் தண்டனையோடு—

(அ) அந்த ஆளுக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவில்லாச் சொத்து யாவும் அத்தகைய குற்றத்தீர்ப்பின் காரணமாக குடியரசுக்கு இழக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் அத்தகைய ஆளால் அத்தகைய சொத்து உரிமை மாற்றப்பட்டால் அல்லது வேறேதும் வழியில் முடிவு செய்யப்பட்டால் அத்தகைய உரிமை மாற்றம் அல்லது முடிவு செய்கை செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகவிருந்திருப்பதாகவும் இருப்பதாகவும் கருதப்படல் வேண்டும்.

தெருக்கள், புகைவண்டிப்பாதை முதலியவற்றை மறித்தலும் சேதப்படுத்தலும்.

39. முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும், இலங்கையின் பிரதேசமெதிலும், எந்தவோராளும் சட்டப்படியான அதிகாரமின்றி ஏதேனும் பொதுத்தெரு, பாலம், அல்லது மதகு அல்லது புகைவண்டிப்பாதை அல்லது பொதுத் தெருப் போக்குவரத்து வாகனத்தைத் தடை செய்யவோ சேதப்படுத்தவோ கூடாது.

புகைவண்டி அஞ்சல், தெருப் போக்குவரத்துச் சேவைகளோடு தலையிடுதல் முதலியன

40. (1) முதலமைச்சராற் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் எந்தவோர் பிரதேசத்திலும், எந்தவோராளும் பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றிலெதையாவது செய்தலாகாது :

(அ) அரசாங்கம் கொண்டு நடாத்தும் புகைவண்டியில் பயணம் செய்ய அதிகாரமளிக்கும் போக்குச்சீட்டு இல்லாமல் பணம் கொடுத்து வாங்கிய பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் ; அல்லது

(ஆ) அந்தப் புகைவண்டிச் சேவை தொழிற்படுதலை எந்தவொரு விதத்திலேனும் தடை செய்தல், அல்லது அதன் தொழிற்பாட்டிற்றலையிடுதல் ; அல்லது

(இ) அரசாங்கம் கொண்டு நடாத்தும் அஞ்சற் சேவையை எந்தவொரு விதத்திலேனும் தடை செய்தல் அல்லது அச்சேவையில் தலையிடுதல் ; அல்லது

(ஈ) ஏலவே பணங்கொடுத்துப் பயணச்சீட்டுப் பெருமல் ஏதேனும் பொதுப் போக்கு வரத்து வாகனத்தில் பிரயாணஞ் செய்தல் ; அல்லது

(உ) அத்தகைய ஏதேனும் வாகனம் தொழிற்படுதலை எந்த விதத்திலேனும் தடை செய்தல் அல்லது அதில் தலையிடுதல்.

(2) ஒருவர் அவர் வகிக்கும் தொழிலின் தன்மையால் அல்லது வேறு வகையால் அவ்வாறு பயணம் செய்வதற்கு உரிமை உடையவராய் இருப்பின் மாத்திரமே அரசாங்கம் கொண்டு நடத்தும் புகைவண்டியில் பயணம் செய்ய அதிகாரமளிக்கும் போக்குச்சீட்டு இல்லாமல் அல்லது பணம் கொடுத்து வாங்கிய பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தால், அல்லது ஏலவே பணம் கொடுத்துப் பயணச்சீட்டுப் பெருமல் ஏதேனும் பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணம் செய்தார் என்றவொரு காரணத்தால் மட்டும் அவர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (அ) எனனும் உட்பந்தியின் அல்லது (ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளை மீறினுர் அல்லர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

தொலைச் செய்திச் சேவைகள் தொடர்பான தவறுகள்.

41. (1) அஞ்சல், தந்தி, தொலைச்செய்தி அல்லது ஒலிபரப்புச் சேவைகளுடன் தலையிடுவதற்கு, அவற்றைப் பழுதுபடுத்துவதற்கு, சேதப்படுத்துவதற்கு, தொடர்பறுப்பதற்கு அல்லது அவற்றை நிலைகுலைப்பதற்கு அல்லது அவற்றைப் பிழைப்படுத்துவதற்கெனக் கருதப்பட்ட உத்தேசிக்கப்பட்ட அல்லது திட்டமிடப்பட்ட யாதாயினும் செயலைப் புரிகின்ற அல்லது புரிவதற்கு ஆயத்தப்படுத்துகின்ற சதி செய்கின்ற அல்லது எத்தனிக்கின்ற எவரும் ஒரு தவற்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) அரசாங்க தொலைபேசிச் செய்திச் சேவையினை வழங்குவதற்கென பாவிக்கப்படும் யாதாயினும் இடத்தில், சட்டப்படியான அதிகாரம் அல்லது நியாயமான காரணம் இல்லாமல் (இதை எண்பிப்பது அத்தகைய ஆளின் பொறுப்பாதல் வேண்டும்) யாதாயினும் ஒலிவாங்கு கருவி, நுணுக்குப் பன்னி, ஒலிபெருக்கி, அல்லது ஒலிச்செறிவு அதிர்வெண்களைக் கேட்கக்கூடிய ஒலி அதிர்வெண்களாக மாற்றும் திறனுள்ள அல்லது யாதாயினும் தொலைபேசியூடான உரையாடலைப் பதிவுசெய்யவல்ல ஏனைய கருவியை அல்லது உபகரணத்தை, தன்வசத்தில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில், வைத்திருக்கும் எவரும், ஒரு தவற்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தவறுகள் புரிய எத்தனித்தல் முதலியன.

42. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறென்றை—

(அ) புரிய எத்தனிக்கும், அல்லது

(ஆ) புரிவதற்கு இன்னேராளுக்கு உதவியளிக்கும் அல்லது உடந்தையாயிருக்கும், அல்லது

(இ) புரிவதற்கு இன்னேராளுடன் சூழ்ச்சி செய்யும்,

எவரேனுமாள், அத்தவற்றுக்குத் தானும் குற்றவாளியாதல் வேண்டியதுடன் அதற்கிணங்க அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் அத்தகைய தவற்றுக்கு விதிக்கப்பட்டவாறுன அதே முறையில் விளங்கப்படுதலும் அதே தண்டனையினுல் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

குற்றமிழைப் போருக்கு உதவுதல்.

43. யாரேனுமொருவர் ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றிற்காகக் குற்றவாளியாகின்றுரென்பதை அறியும் அல்லது நம்புதற்கு ஞாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும் அந்த யாரேனுமோராளுக்கு, அந்தச் சொல்லப்பட்ட குற்றத்திற்காக அந்த ஆளைக் கைதுசெய்வதை அல்லது தண்டிப்பதைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும் குழப்பும் எண்ணத்தோடு, உதவியளிக்கக் கூடாது.

ஆட்குழுவினரால் செய்யப்படும் குற்றங்கள்.

44. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்று ஓர் ஆட்குழுவினராற் செய்யப்பட்டவிடத்து—

(அ) அந்தக் குழுவினர் இணைக்கப்பட்ட குழுவினராயின், அவ் இணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணியாளரும் ;

(ஆ) அந்தக் குழு ஒரு வணிகக் கூட்டுநிலையமாயின் அவ்வணிக்க கூட்டுநிலையத்தின், ஒவ்வொரு பங்காளனும் ;

தமக்குத் தெரியாமல் அக்குற்றம் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய குற்றம் புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தம்மாலானவரை கவனமெடுத்தாரென்று அவர் நிரூபித்தாலன்றி அக்குற்றம் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டம்.

45. (1) ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை, அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற்றிற்கு இணங்கத் தவறும் எந்தவோராளும், குற்றமொன்று புரிந்தவராகி அத்தகைய ஒழுங்குவிதியிற்

காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய, நீதிவான் ஒருவரால் சுருக்க விசாரணை செய்யப்பட்டு குற்றவாளியென்று காணப்பட்டதன் மேல், மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந் தாண்டிற்கு மிகாததுமான ஒரு காலத்திற்குக் கடூழியச் சிறைத்தண்டனையும் ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மிகாததுமான குற்றப்பணமும் விதிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ் ஒழுங்குவிதியில் தண்டனையெதுவும் குறிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய குற்றத்தைப் புரியும் ஓர் ஆள், நீதி வானொருவரால் சுருக்க விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளியென்று காணப்பட்டபின், இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நிதி நிருவாகச் சட்டத்தின் 238 (2) என்னும் பிரிவு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோராளுக்கும் ஏற்புடையதாகாது.

## பாகம் 6—நுண்ணாய்வுகள், விளக்கம் முதலியன

**46.** (அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கானவோர் உட்கருத்து, எத்தனிப்பு அல்லது தயார்செய்தல் பற்றி அல்லது அது புரியப்பட்டது பற்றி அறியவரும் எவரும் அது பற்றிய தகவலை மிக அண்மையில் உள்ள கிராம சேவையாளருக்கு அல்லது மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் கொடுத் தல் வேண்டும். *தகவல் கொடுப்ப தற்குரிய கடமை.*

(ஆ) (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தகவலை வேண்டுமென்று கொடுக்கத் தவறும் அல்லது மறுக்கும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(இ) அவசரகால ஒழுங்குவிதியெதனதும் கீழான தவறொன்று தொடர்பிலான ஏதேனும் தகவலைப் பெறும் கிராம சேவையாளரெவரும், மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்கு அத்தகைய தகவலை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

**47.** ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு பற்றி நுண்ணாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரெவரேனும்— *நுண்ணாய்வு செய்யும் பொலிசு அலுவலரின் தத்துவங்கள்.*

(அ) அத்தவறு பற்றிய நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவரெனச் சந்தேக மான எவரேனுமாளை வாய்மொழி மூலம் விசாரணை செய்யலாம்; அத்துடன் அவ்வாறு விசாரணை செய்யப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை எழுத்தில் பதிதல் வேண்டும்:

ஆயினும், எப்படியிருப்பினும், அத்தகைய கூற்றொன்று அதனைச் செய்பவராலும் அதனைப் பதிவுசெய்யும் பொலிசு அலுவலராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்;

இன்னும் அத்தகைய கூற்றொன்றை ஒப்பமிட மறுக்கும் ஆளொருவரின் விடயத்தில், அத் தகைய மறுப்பானது பொலிசு அலுவலரால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளின் மாதிரிக் கையெழுத்துக்கள், நிழற் படங்கள், விரலடையாளங் கள், மற்றும் வேறு அடையாளங் காட்டும் குறிகளைப் பெற்றுக்கொள்ளலாம்;

(இ) அத்தகைய ஆளைத் தேடுகையிடலாம் அல்லது அத்தகைய ஆள் வதியும் வீட்டினுள் அல்லது வேலைத்தலத்தினுள் நுழைந்து அவ்விடத்தைத் தேடலாம்;

(ஈ) அத்தகைய ஏதேனும் தவறுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்டதாக அல்லது சம்பந்தப்பட்டதாகச் சந்தேகமான ஏதேனும் இடத் தினுள், கட்டிடத்தினுள், வாகனத்தினுள் அல்லது கலத்தினுள் நுழைந்து தேடலாம்; அத்துடன்

(உ) ஏதேனும் தந்திச்செய்தி, அஞ்சல் ஆவணம் அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள வேறு புத்தகம் அல்லது ஆவணம் உட்பட, எவ்வகையினதான அசைவுள்ள ஆதனமெதனையும் சோதனையிட்டு உடைமையிலெடுக்கலாம்.

ஆயினும், எப்படியிருப்பினும், ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது அஞ்சலகத்திலிருந்து ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைப் பெறுவதற்கு நாடுமுன்னர், விடயத்திற்கேற்ப, அத்தகைய வங்கிக்கு அல்லது அஞ்சலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள முகாமையாளர் அல்லது அலுவலர்க்கு, அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் அத்தகைய நுண்ணாய்வின் நோக்கங்களுக் காகத் தேவைப்படுகின்றதென, உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கும் பொலிசு அலுவலரொருவரினால் எழுத்திலான அறிக்கை கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

சந்தேகப் பேர்வழி களிடமுள்ள ஆவணங்கள்.

48. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறெதனுடனும் தொடர்புபட்டவரென ஐயுறப்படும் எவரேனுமாளின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம் அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் நடவடிக்கைகளில் இயைபானதாதல் வேண்டியதுடன் அத்தகைய புத்தகம், ஆவணம் அல்லது பத்திரத்தின் உள்ளீடுகள், அதற்கான மேலும் எண்பிப்பின்றி, அத்தகைய ஆளுக்கெதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

49. —

50. —

கேள்வி கேட்பதற் குள்ள உரிமையும் உதவி செய்வதற் கான கடமையும்.

51. (அ) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை நுண்ணாய்வு செய்யும் பொலிசு அலுவலரொருவர் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் தத்துவமுள்ள ஒருவர்—

(i) அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது கட்டுக்காப்பில் இருப்பவர் உட்பட எவரையும், விசாரணை செய்ய, அல்லது அத்தகைய விசாரணை நோக்கமாக இடத்திற்கிடம் இட்டுச் செல்ல தத்துவமுள்ளார்.

(ii) இத்துடன், விசாரணை செய்யப்படும் எவரிடமிருந்தும், விசாரணைக்குத் தேவைப்படும் பிரதியொன்று உட்பட எப்பொருளையேனும் உடைமையெடுக்கவும் தத்துவமுள்ளார்.

(ஆ) பொலிசு அலுவலரொருவர்க்கு அல்லது தத்துவமடைந்த ஒருவர்க்கு, அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ், விசாரணை செய்யப்படும் குற்றம் சம்பந்தமாக சகல உதவிகளையும் புரிவது ஒவ்வொருவரது கடமையாகும்; அத்துடன் இந்த ஒழுங்குவிதியின் (அ) பந்தியின் (1) வது உப பந்தியின்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வொருவரும், அவரிடம் கேட்கப்படும் சகல கேள்விகளுக்கும் உண்மையான பதிலிறுக்க வேண்டுவதுடன், வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், எப்பிரதியிலாவது அடங்கியுள்ள அல்லது தெரிந்த விசாரணை சம்பந்தமான விடயங்கள், எந்த வகையில் விசாரணை செய்யப்படுபவர்க்கு இப்பிரதியிலுள்ள அல்லது வேறு விடயம் கிடைத்திருப்பினும், அவை யாவையும் வெளியிடுதல் வேண்டும்.

(இ) பொலிசு அலுவலரொருவர் அல்லது தத்துவமடைந்த ஒருவர், அவசரகால ஒழுங்குவிதியெதனதும் கீழ் விசாரணை செய்யும் குற்றம் விஷயமாக, தன் பொறுப்பிலல்லது தனதுரிமையிலுள்ள பிரதியுட்பட எப்பொருளையேனும், அந்தப் பொலிசு அலுவலரிடம் அல்லது தத்துவமடைந்தவரிடம் அவர் ஆணையிடும்பொழுது ஒப்படைத்தல் இந்த ஒழுங்குவிதியின் (அ) பந்தியின் கீழ் விசாரணை செய்யப்படும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

(ஈ) இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவற்றையேனும் மீறுவது அல்லது நிர்மாணிக்கப்பட்ட கடமையைச் செய்யத் தவறுவது அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் குற்றமென, இவ்விதிகளின் 45 ஆம் விதியின்கீழ் தண்டனைக்குள்ளாகும்.

பொலிசலுவலர்க்கு உட்புகும் உரிமை.

52. எவரேனுமாள் தடுப்பில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் காலத்தின்போது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை நுண்ணாய்வு செய்யும் பொலிசு அலுவலரொருவர், அத்தகைய நுண்ணாய்வின் நோக்கங்களுக்காக நியாயமான நேரங்களில் அத்தகைய எவரேனுமாளிடம் செல்வதற்கு உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்.

பொலிசலுவலரின் தத்துவம் பொதுத் தத்துவத்துக்கு மேற்பட்டது.

53. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் பொலிசு அலுவலரொருவரின் தத்துவங்கள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்குள்ள தத்துவங்களுக்கு மேலதிகமானவையேயல்லாது அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகா.

பொலிஸ் உத்தியோகத்தரொருவரின் தத்துவங்கள் வேறு சில அலுவலர்களாலும் ஆட்களாலும் பிரயோகிக்கப்படுதல்.

54. (1) ஏதேனும், அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் பொலிசு உத்தியோகத்தரொருவரின் தத்துவங்கள், முறையே இலங்கைத் தரைப்படை ஏவுநரால், இலங்கைக் கடற்படைக் கப்டன் அல்லது இலங்கை விமானப்படை ஏவுநரால் அவ்வண்ணம் செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை விமானப்படையின் ஆணைப்படுத்தப்பட்ட அலுவலரெவராலும் பிரயோகிக்கப்படலாம்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் தத்துவங்கள், அதற்காக முதலமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினாலும் பிரயோகிக்கப்படலாம்.

எழுத்தாணைகளும் தடையாணைகளும் இடைநிறுத்தப்படல்

55. 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 12, 21, 42 ஆகிய பிரிவுகளானவை ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் செய்யப்பட்ட அல்லது புரியப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் கட்டளை, பணிப்பு அல்லது வேறு செயல் ஏதற்கேனும், எதன் தொடர்பிலேனும், எது சம்பந்தமாகவேனும் ஏற்புடையனவாகா.

*அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான குற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்தல்.*

56. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஒருவரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றம் தொடர்பாக நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்திலும் மற்ற அலுவல்களைக் கவனிக்க முன்னர் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*விசாரணைகளும் விளக்கங்களும்.*

57. (1) இதனகத்து வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிரவும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறென்று தொடர்பிலான நடவடிக்கைகள், அப்போதைக்கு அவ்வாள் உள்ள இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள இலங்கையிலுள்ள தோதான நீதிமன்றத்தின் முன்னர் எடுக்கப்படலாம்.

(2) எந்த நீதிமன்றத்தில்—

(அ) அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறுகள் ; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறுகள், அத்தவறுகளை ஆக்கும் செயல்கள் அல்லது செய்யாமைகள் அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழ் ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாகவாயினுஞ்சரி மறைமுகமாகவாயினுஞ்சரி, பிரயோகிப்பதன் அல்லது புரிவதன் அல்லது அவ்விதம் கருதப்படும் பிரயோகத்தின் அல்லது புரியப்படுதலின் விளைவானமையாய் அல்லது அவற்றிலிருந்து எழுந்தனவாய் அல்லது அவற்றின்போது செய்யப்பட்டனவாய் அல்லது செய்யாது தவிர்க்கப்பட்டனவாய் உள்ளவிடத்து,

அவை விசாரிக்கப்படுதல் அல்லது விளங்கப்படுதல் வேண்டும் என்பதனைச் சட்டத்துறைத் தலைமை அதிபதி தீர்மானிக்கலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தவறுகள் அந்நீதிமன்றத்தின் இடப்பரப்பு நியாயாதிக்க எல்லைகளுக்குள் புரியப்பட்டிருப்பின் அத்தவறுகளை விசாரிக்க அல்லது விளங்க நியாயாதிக்கம் கொண்டிருக்கவேண்டிய நீதிமன்றமொன்றாதல் வேண்டும்.

(3) ஏதேனும் தவறு எந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்படவேண்டுமென இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவர் தமது எழுத்திலான சிறப்பாணை மூலம் அத்தகைய நீதிமன்றத்தை அத்தவறு விசாரிக்கப்படவேண்டிய அல்லது விளங்கப்பட வேண்டிய நீதிமன்றமெனச் சுட்டிக் குறித்தல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய விசாரணை அல்லது விளக்க நடவடிக்கைகளுடன் பதிவேட்டில் கோப்பிடப்படவேண்டிய அத்தகைய சிறப்பாணை அதிகாரத்தின்மேல் அந்நீதிமன்றத்தினால் அவ்விசாரணை அல்லது விளக்கம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழான சட்டத்துறைத் தலைமையதிபதியின் தீர்மானமொன்று—

(அ) அவசரகால ஒழுங்விதிகளின்கீழ் ஒன்றில் இலங்கையடங்கலிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(ஆ) ஒன்றில் இலங்கையடங்கலிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிபபிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டதாகச் சாட்டப்படும் அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(இ) ஒன்றில் இலங்கையடங்கலிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரபபில் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிபபிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சார்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(ஈ) ஒன்றில் இலங்கையடங்கலிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(உ) ஒன்றில் இலங்கையடங்கலிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் எவரேனும் குறிப்பிட்ட ஆளினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிப்பிட்ட தவறுக்கு

ஏற்புடையதாக்கப்படலாம்.

(5) இவ்வொழுங்குவிதி தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்போது, ஏதேனும் குற்றவியற்றவறு தொடர்பிலான ஏதேனும் விசாரணையை அல்லது விளக்கத்தை ஏதேனும் நீதிமன்றம் அல்லது இடத்திலிருந்து வேறேதேனும் நீதிமன்றத்திற்கு அல்லது இடத்திற்கு மாற்றுவதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குத் தத்துவமளிக்கும் 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவு வலுவில்லாதிருக்கின்றதென்றாற் போன்று பயனுடையதாதல் வேண்டும்.

சட்டத்துறை தலைமையதிபதியின் அனுமதி.

58. (1) சட்டத்துறை தலைமை அதிபதியின் எழுத்துமூல அனுமதி இருந்தாலல்லாமல்—

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிரான எந்தவொரு குற்றத்திற்காகவும் ; அல்லது

(ஆ) அக்குற்றமாக அமையும் செயல் அல்லது செய்யாமை அத்தகைய ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாக அல்லது மறைமுகமாக நிறைவேற்றுதல் அல்லது புரிதல் அல்லது கருதப்படும் நிறைவேற்றுதல் அல்லது கருதப்படும் புரிதல் என்பவற்றின் விளைவாக அல்லது அவற்றிலிருந்து எழுந்ததாக அல்லது அச்செயலின்போது செய்யப்பட்டதாக அல்லது செய்யாது விடப்பட்டதாகவுள்ள, வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத்திற்கு எதிரான, ஒரு குற்றத்திற்காக, வழக்குத் தொடரப்படுதல் ஆகாது.

(2) அக்கட்டளையிற் காட்டப்பட்டிருக்கக்கூடிய அவசரகால ஒழுங்குவிதி எதற்குமெதிரான ஒரு குற்றம் சம்பந்தமாக, இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா வென முதலமைச்சர் கட்டளை மூலம் வெளிப்படுத்தலாம் ; அதற்கிணங்க அக்கட்டளை நடைமுறையிலிருக்கும் காலம் வரையில் அப்பந்தி அத்தகைய குற்றமெதற்கும் ஏற்புடையதாகாது.

மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம்.

59. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதி அல்லது வேறு எழுத்திலான சட்டம் எது எவ்வாறிருப்பினும், அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவற்றுக்கான விளக்கம், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழங்கப்படும் குற்றப்பத்திரிகை மூலம் நடாத்தப்படலாம். அத்துடன் அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் யூரிமார் இன்றி, மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளினால் மேல் நீதிமன்றத்தின் நீதியரசர் குழுவின் முன்னர் விளங்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவர், சட்டத்துறைத் தலைமைத்திபதியின் அனுமதியுடனன்றிப் பிணையிற் செல்ல அனுமதிக்கப்படலாகாது.

(3) (2) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதியின் கீழான ஏதேனும் விளக்கத்தில் நீதிமன்றம் அல்லது தலைமை வகிக்கும் அதன் நீதிபதி நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட எல்லா ஆட்களையும் அழைத்துவரும்படி, கைது செய்யும்படி கட்டுக்காப்பிலிடும்படி அல்லது பிணையில் விடும்படி பணிப்புரைகளை விடுக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னரான எவரேனுமாளின் விளக்கம் அத்தகைய ஆள் கைது செய்யப்படுதலைத் தவிர்க்கிறார் அல்லது மறைந்தொழுகுகிறார் அல்லது நோய் எனப் பாசாங்கு செய்கிறார் என நீதிமன்றம் திருப்திப்படின் அவரில்லாமலே தொடங்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(5) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் எவரும், அது அத்தகைய விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்கு அதிகமாக விருத்தலாகாத எந்நேரத்திலேனும் மேல் நீதிமனறத்துக்கான எழுத்திலான விண்ணப்பமூலம், வழக்குத் தொடருநர் அழைக்கக் கருதியிருக்கும் சாட்சிகளினால் செய்யப்பட்ட கூற்றுக்களினதும், விளக்கத்தின்போது நம்பப்படவுள்ள ஆவணங்களினதும் படிகளைத் தனக்குக் கொடுத்துதவுமாறு வேண்டலாம். அத்தகைய விண்ணப்பம் முதன்மை நீதியரசரால் அல்லது வேறு எவரேனும் நீதிபதியால் விசாரிக்கப்படலாம். அத்துடன் நீதிமன்றம் அத்தகைய கூற்றுக்களின் அல்லது ஆவணங்களின் எல்லாப்படிகளையும் அல்லது அது தன் தற்றுணிபில் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கூற்றுக்களின் அல்லது ஆவணங்களின் படிகளை மட்டும் அத்தகைய ஆளுக்குக் கொடுக்க வேண்டுமெனப் பணிக்கலாம்.

(6) நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படக்கூடியவாறான, அல்லது 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான, அத்தகைய திரிபுகளுக்கமைய, மேல் நீதிமன்றத்தின் முன்னரான ஏனைய விளக்கங்களுக்கு வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக இப்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கமொன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழான விளக்கமொன்று நடாத்தப்பட்ட பின்னரான ஏதேனும் குற்றத் தீர்ப்புக்கெதிரான மேன்முறையீட்டைக் கேட்கும் நோக்கங்களுக்காக, உயர்நீதிமன்றம் முதன்மை நீதியரசரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஐந்து நீதிபதிகளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கூற்றுகள் சான்றில் ஏற்புடையன வாகா.

60. (1) அவசரகால ஒழுங்குவிதியொன்றன் கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளை விளங்குகையில் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட கூற்றொன்று, அது குற்ற ஒப்புதலொன்றாகவிருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அத்தகைய ஆள், அக்கூற்றைச் செய்த நேரத்தில் பொலிச அலுவலரொருவரின் கட்டுக்காப்பில் இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அல்லது அத்தகைய கூற்றானது நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்பட்டாலுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய கூற்று இயைபற்றதாகாதிருப்பின் அவ்விதமிருப்பின் மட்டுமே அத்தகைய ஆளுக்கெதிரான எண்பிப்பாகவிருக்கலாம் :

அத். 14.

ஆயினும், எப்படியிருப்பினும், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறைந்த பொலிசு அலுவர் ஒருவருக்கு அத்தகைய கூற்றுச் செய்யப்பட்டிருந்தால் அத்தகைய கூற்றெதுவும் அத்தகைய ஆளுக் கெதிராக எண்பிக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றன் விடயத்தில், எவரேனு மாளுக்கெதிராக (1) ஆம் பந்தியின் கீழ் எண்பிக்கப்படக்கூடியதான, அவரினாலேயே செய்யப்பட்ட கூற்றொன்று, இவ்வொழுங்குவிதிகளின் 47 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்ச் செய்யப்பட்ட கூற்றொன்றல்லாத வேறு சான்றினால் அத்தகைய கூற்றினது முக்கியமான விபரங்கள் உறுதிப்படுத்தப்படிருப்பின், இருப்பின மட்டுமே, அத்தகைய தவற்றுக்காகக் கூட்டாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வேறெவரேனுமாளுக் கெதிராக எண்பிக்கப்படலாம்.

(3) (1) ஆம் அல்லது (2) ஆம் பந்திகளிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கூற்றுச் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் இயைபானதல்லவென எண்பிக்கும் பொறுப்பு அது இயைபானதல்லவென எடுத்துக்கூறும் ஆளின் மீதாதல் வேண்டும்.

(4) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 25 ஆம், 26 ஆம், 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எவையேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவற்றின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகா. அத். 14.

(5) எவரேனுமாளினாற் செய்யப்பட்ட கூற்றொன்று, 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எவ்விதமிருப்பினும், (1) ஆம் அல்லது (2) ஆம் பந்திகளின் கீழ் எண்பிக்கப்படலாம்.

நீதி நிருவாகச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

61. புலனாய்வுகள் தொடர்பிலான 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவையேனும் அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழ் நடாத்தப்படும் எவையேனும் நுண்ணாய்வுகளுக்கு ஏற்புடையனவாதலாகா.

அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அத்தாட்சி பத்திரமும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தை அழித்தலும்.

62. (1) தவறொன்றுக்கான எவையேனும் நடவடிக்கைகளில் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு, பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது அத்தகைய தன்மையில் செயலாற்றும் வேறெவரேனும் அலுவலருக்குப் பரிசோதனை அல்லது பகுப்பாய்வுக்கென அளிக்கப்பட்ட எப்பொருளினதும் அல்லது பதார்த்தத்தினதும் அடையாளம், சேர்க்கை அல்லது இயல்பு பற்றி அவரது கைப்படச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் அத்தாட்சிப்பத்திரமொன்று அத்தகைய ஆள் அத்தகைய நடவடிக்கைகளிற் சான்றளிப்பதற்கு அழைக்கப்படாமல், அத்தகைய அத்தாட்சிப்பத்திரம் கொண்டுள்ள கூற்றுக்களின் உண்மை பற்றி முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(2) அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பிரதிப் பகுப்பாய்வாளர், அல்லது அரசாங்க உதவிப் பகுப்பாய்வாளர், அல்லது அந்தத் தன்மையில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலர், ஏதேனும் தவறு தொடர்பில், பரிசோதனை செய்வதற்கு அல்லது பகுப்பாய்வு செய்வதற்கென அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தைத் தமது கட்டுக்காவலில் வைத்திருத்தல் பாதுகாப்பற்றது அல்லது இயலக்கூடியது அல்ல என்று அபிப்பிராயப்பட்டால், அத்தகைய அலுவலர் தேவையான அத்தகைய பரிசோதனையை அல்லது பகுப்பாய்வைச் செய்த பின்னர் அத்தகைய பொருளை அல்லது பதார்த்தத்தை ஒழிப்பித்துவிடலாம் அல்லது அழிப்பித்துவிடலாம்.

(3) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி ஏதேனும் பொருள் அல்லது பதார்த்தம் ஒழிக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டிருக்குமிடத்து, அவ்விதம் ஒழிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பொருள் அல்லது பதார்த்தத்தின் பதிவேடொன்று அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பிரதிப் பகுப்பாய்வாளர் அல்லது அரசாங்க உதவிப் பகுப்பாய்வாளர் அல்லது விடயத்துக்கேற்ப அந்தத் தன்மையில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலரால் வைத்திருக்கப்படல் வேண்டும். அத்தகைய எவரேனும் அலுவலரின் கைப்பட்டதெனக் கருதப்படுவதும், அத்தகைய பதிவேட்டின் பொருளடக்கத்தை அல்லது உள்ளீட்டைக் கொண்டதுமான அத்தாட்சிப்பத்திரம் ஏதேனும் தவறுக்கான எவையேனும் நடவடிக்கைகளில் அத்தகைய அத்தாட்சிப்பத்திரத்திற் காணப்படும் கூற்றுக்கள் உண்மையானவை என்பதற்கு, அந்நடவடிக்கைகளில் சான்றளிப்பதற்கென அத்தகைய அலுவலர் அழைக்கப்படாமலே, முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியில் " தவறு " என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான, வெடிப்பொருட் சட்டத்தின் கீழான் அல்லது 1966 இன் 18 ஆம் இலக்கத் தீங்கு விளைக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் அல்லது வெடிப்பொருட் கட்டளைச் சட்டத்தின் கீழான அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் 6 ஆம் 7 ஆம் அல்லது 8 ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறெனப் பொருள்படும். அத். 182. அத். 183. அத். 19.

பொலிஸ் நிலையமொன்றிலுள்ள ஏதேனும் வஸ்து அல்லது பொருள் பொலிஸ் அலுவலரொருவரினால் அழிக்கப்படுதலும் அரசாங்கப் பகுப்பாளரினதும் பொலிஸ் அலுவலரினதும் சான்றிதழும்.

62அ. (1) ஏதேனும் பொலிஸ் நிலையத்திற் கிடக்கும் வஸ்து அல்லது பொருள் எதனையும் பரிசோதித்துப் பகுக்கும் படி அரசாங்கப் பகுப்பாளர், பிரதி அரசாங்கப் பகுப்பாளர் அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாளர் அல்லது அத்தகைய தன்மையில் செயலாற்றும் வேறெவரேனும் அலுவலர் வேண்டப்படுமிடத்தும், அத்தகைய வஸ்துவை அல்லது பொருளை ஒரு பொலிஸ் நிலையத்தில் களஞ்சியப்படுத்துதல், பாதுகாப்பதானதல்ல அல்லது செயற்படக் கூடியதல்லவென அத்தகைய அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்தும், அவர்—

(அ) அத்தகைய வஸ்துவின் அல்லது பொருளின் மாதிரியொன்றை அல்லது எடுத்துக் காட்டொன்றை எடுத்தபின்னரும்,

(ஆ) அப்பொலிஸ் நிலையத்தில் விடப்பட்ட அத்தகைய வஸ்துவின் அல்லது பொருளின் அளவு பற்றிப் பதிவேடொன்றைத் தயாரித்த பின்னரும்.

அப்பொலிஸ் நிலையத்தில் விடப்பட்ட அத்தகைய வஸ்து அல்லது பொருள் அழிக்கப்படலாமெ அல்லது ஒழிக்கப்படலாமெனப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு எழுத்தில் ஆலோசனை கூறலாம்.

(2) ஒராம் பந்தியில் தரப்பட்டுள்ள முறையில் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு ஆலோசனை கூறப்படுமிடத்து, அத்தகைய வஸ்துவின் அல்லது பொருளின் அளவு பற்றிப் பதிவேடொன்றைத் தயாரித்த பின்னர் அப்பொலிஸ் நிலையத்திற் கிடக்கும் அத்தகைய வஸ்துவை அல்லது பொருளை அழிக்கும்படி அல்லது முடிபுசெய்யும்படி அவர் பொலிஸ் அலுவலரொருவரைப் பணிக்கலாம்.

(3) சொல்லப்பட்ட (2) ஆம் பந்தியின்கீழ் அவர் செய்த பதிவேட்டின் பொருள் அல்லது உள்ளீடுகளைக் கொண்டதான (2) ஆம் பந்தியிற் குறிப்பிட்டவாறான அத்தகைய எவரேனும் பொலிஸ் அலுவலரின் கைப்படச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழொன்று, ஏதேனும் தவறுக்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சி யளிக்கும்படி அத்தகைய பொலிஸ் அலுவலர் அழைக்கப்படாமலே, அத்தகைய சான்றிதழில் உள்ள கூற்றுக்களின் உண்மை பற்றி முடிவான எண்பிப்பாயிருத்தல் வேண்டும்.

(4) (அ) ஒராம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் அவரினால் எடுக்கப்பட்டதான ஏதேனும் மாதிரி அல்லது எடுத்துக்காட்டின் அடையாளம், அமைப்பு அல்லது தன்மை, அல்லது

(ஆ) ஒராம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் அவரினால் செய்யப்பட்டதான ஏதேனும் பதிவேட்டின் பொருள் அல்லது உள்ளீடுகள்,

பற்றிய, அரசாங்கப் பகுப்பாளர், பிரதி அரசாங்கப் பகுப்பாளர் அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாளர் அல்லது அத்தகைய தன்மையில் செயலாற்றும் எவரேனும் அலுவலரின் கைப்படச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழொன்று, தவறொன்றுக்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்கும்படி அத்தகைய அலுவலர் அழைக்கப் படாமலே, அத்தகைய சான்றிதழில் உள்ள கூற்றுக்களின் உண்மை பற்றி முடிவான எண்பிப்பா யிருத்தல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியில்—

அத். 182.
அத். 183.
அத். 19.

(அ) "பொலிஸ் 'அலுவலர்'" என்பது பொலிஸ் நிலையமொன்றுக்குப் பொறுப்பாக வுள்ள பொலிஸ் அலுவலரொருவர் எனப் பொருள்படும் ; அத்துடன்

(ஆ) "தவறு" என்பது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான அல்லது வெடிப் பொருள்கள் சட்டத்தின் கீழான அல்லது 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்குவிளைக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழான, அல்லது சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் VI ஆம் அத்தியாயம், VII ஆம் அத்தியாயம் அல்லது VIII ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறு எனப் பொருள்படும்.

## பாகம் 7—பல்வகையன

நீதி நிருவாகச் சட்டம் திரிபு செய்யப்படுதல்.

63. (1) முதலமைச்சரால் கட்டளையிற் குறிப்பிடப்படும் இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் இவ்வொழுங்குவிதி நடைமுறையிலிருக்கும் காலத்தில்—

(அ) சட்டவிரோதமாக ஆட்கள் கூடிநிற்பதைக் கலைப்பதற்கான தத்துவங்கள் சம்பந்த மான 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 58(1) ஆம், 58(2) ஆம், 58(3) ஆம், 58(4) ஆம் பிரிவுகள் நடைமுறையிலிராதொழியும்; அத்தோடு

அத். 20.

(ஆ) "சாசன்" தரத்திற்குக் குறையாத யாரேனும் பொலிசு உத்தியோகத்தர், கோப்போரல் தரத்திற்குக் குறையாத யாரேனும் இலங்கைத் தரைப்படை உறுப்பினர், தலைமைக் கடலோடி தரத்திற்குக் குறையாத யாரேனும் இலங்கைக் கடற்படையுறுப்பினர் அல்லது கோப்போரல் தரத்திற்குக் குறையாத யாரேனும் இலங்கை ஆகாயப்படை உறுப்பினர் ஏதேனும் பொதுத் தெரு, புகைவண்டிப்பாதை, பொதுப்பூங்கா, பொதுப் பொழுதுபோக்கிடம், அல்லது வேறு விளையாட்டிடம், கடற்கரை என்பவற் றில் அல்லது அவற்றுக்கண்மையில் அல்லது ஏதேனும் பொதுக் கட்டடம் அல்லது

அரசாங்கத் திணைக்களம் அமைந்துள்ள வளவில் அல்லது வளவுக்கண்மையில் அல்லது வளவின் அயலில் நிற்கும் எந்த ஆளையும் அல்லது ஆட்களையும் அந்த இடத்திலிருந்து அகலும்படி கட்டளையிடலாம், அத்தகைய கட்டளைக்கு இணங்குதல் அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழான கட்டளையொன்று அத்தகைய கட்டளையை பிறப்பிப்பதற்கான தத்துவமுடைய உத்தியோகத்தரொருவரால் விடுக்கப்பட்ட பின்னர் எவரேனும் அக்கட்டளைக்கு இணங்க மறுத்தால் அல்லது இணங்க மறுப்பதாக தீர்மானங் கொண்டவர் போல் நடந்துகொண்டால் அத்தகைய உத்தியோகத்தர் தேவையான அத்தகைய உதவியோடு ஆயுதம் தாங்கிய படை உட்பட வலோற்காரத்தை உபயோகிப்பதன் மூலம் அத்தகைய கட்டளையை நிறைவேற்ற முற்படலாம்; அத்துடன் அவர் அத்தகைய ஆளை அவ்விடத்திலிருந்தும் அகற்ற, கைது செய்ய, அல்லது தனிப்படுத்தி வைக்க வழிவகைகள் செய்யலாம்

(3) இவ்வொழுங்குவிதி நடைமுறையிற்றொடர்ந்திருக்கும் காலத்து 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 250(1) ஆம், 250 (2) ஆம், 250(3) ஆம், 261 (2) ஆம் பிரிவுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்படும் அல்லது குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படும் யாரேனும் ஆளுக்கு அல்லது அவர் தொடர்பாக ஏற்புடையதாதலாகா.

63 (அ). 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், நீதிவான் நீதிமன்றமானது தண்டனைச் சட்டக் கோவையின் 317, 380, 382, 392, 440 அல்லது 443 ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கப்படற்குரிய ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிரான எல்லாக் குற்ற வழக்குகளையும் விசாரிக்கவும், விளங்கவும், தீர்மானிக்கவும், அத்தகைய ஒவ்வொரு தவறு தொடர்பிலும் மாவட்ட நீதிமன்றம் விதிக்கக்கூடியதான மறியற் தண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இவை இரண்டினதும் அரைப்பங்கிற்கு மேற்படாத தண்டனையை விதிக்கவும் நியாயாதிக்கமுடையதாக இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட சில தவறுகளை விளங்குவதற்கு நீதிவான் நீதிமன்றங்கள் நியாயாதிக்க முடையனவாதல்.

ஆயின், துணிவுரை பதியப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான நடவடிக்கைகளில் எத்தவறு தொடர்பில், அத்தகைய ஆள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அத்தவறு தொடர்பில், அல்லது அத்தகைய தவறு எச்செயற்கோவையிற் புரியப்பட்டதோ அதே செயற்கோவையின்போது புரியப்பட்ட வேறு ஏதேனும் தவறு தொடர்பில் அவ்வாளுக்கு எதிரான ஒரு குற்றப்பகர்வை பகிரங்க குற்றவழக்குகள் பணிப்பாளர் தாம் அனுப்பியுள்ளார் என அல்லது அனுப்புவதற்குக் கருதியுள்ளார் என எழுத்துமூலம் நீதிவானுக்கு அறிவிக்குமிடத்து அத்தகைய ஆளுக்கெதிராக அந்நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் மேலும் நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் அத்தகைய ஆளை விளங்குவதற்கு அந்நீதிவான் நீதிமன்றம் நியாயதிக்கமுடையதாதலாகாது.

64. (1) வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்விதம் இருப்பினும்,— பிணை.

(i) தண்டனைச்சட்டக்கோவையின் VI ஆம் அல்லது VII ஆம் அத்தியாயத்தின் கீழான ;

(ii) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டுள்ள ஏதேனும் சங்கத்திற்கு, ஏதேனும் வங்கிக்கு, ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது அதன் மூலதனமானது முழுதாகவோ பகுதியாகவோ அரசாங்கத்தினால் உதவப்பட்டுள்ள ஏதேனும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் ஆதனம் தொடர்பில், தண்டனைச்சட்டக் கோவையின் 367, 370, 386, 389, 391 அல்லது 394 ஆகிய பிரிவுகளின் கீழான ; அல்லது

(iii) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான,

ஏதேனும் தவறு புரிந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் எவரேனும் ஆளை நீதிவான் எவரும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான முற் சம்மதத்துடனல்லாது, பிணையில் விடுதல் ஆகாது.

ஆயினும், ஏதேனும் அத்தகைய தவறுபற்றிய முறைப்பாடானது விழலானது, அலைக்கழிப்பதற்கானது அல்லது அற்பத்தன்மைத்தானது என நீதிவானொருவர் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தண்டனைச்சட்டக்கோவைப் பிரிவுகளுள் எதன் கீழுமான தவறு எவ் ஆதனம் தொடர்பாகப் புரியப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதோ, அவ் ஆதனத்தின் பெறுமதியானது ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாது இருக்குமிடத்து, நீதிவான் அத்தகைய ஆளை சட்டத்துறைத் தலைமையதிபதியின் முற்சம்மதமில்லாமலே பிணையில் விடலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் காரணமாக ஆளொருவர் விளக்கமறியலில் வைக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் அத்தகைய விளக்கமறியல் பற்றியும், அத்தகைய விடயம் தொடர்பான சூழ்நிலைகள் பற்றியும் நீதிவான் உடனடியாகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் காரணமாக எவரேனும் ஆள் ஒரு மாத காலத்திற்குத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தால், சட்டத்துறைத் தலைமையதிபதி வேறு விதமாகப் பணித்தாலன்றி, நீதிவான் அத்தகைய ஆளைப் பிணையில் விடுதல் வேண்டும்.

(4) நீதிவானொருவர் எவரேனும் ஆளைப் பிணையில்விட்டு, சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய ஆளானவர் அவ்வாறு விடப்படிருத்தல் ஆகாதென நீதிவானுக்கு அறிவித்தால், நீதிவான், அத்தகைய ஆளைக் கட்டுக்காப்பில் எடுக்கவும், விளக்கமறியலில் வைக்கவும் அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

*கேள்விகளுக்கு விடையளிக்கும் கடமை.*

65. (1) வேறேதேனுமொரு சட்டத்தில் முரண்பாடாக எது எவ்விதமிருப்பினும் எதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பாதுகாவலில் எடுபட்டு மறித்துவைக்கப்பட்ட ஒருவர் அத்தகைய பாதுகாவலின் போதும் மறித்துவைக்கப்படுதலின்போதும் யாரேனும் பொலிசுத்தியோகத்தரால் அல்லது தரைப்படை ஏவுநர், கடற்படைத் தலைவன் அல்லது ஆகாயப்படை ஏவுநரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனும் உத்தியோகத்தரால் வினவப்படலாம் ; அவ்வாறு அவரிடம் வினவப்படும் வினக்களுக்கு விடையிறுத்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) ஒராம் பந்தியின் கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட எவரேனும் ஆளை விசாரிக்கும் நோககத்திறகாக அல்லது அத்தகைய விசாரிபபுடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் நோக்கத்துக்காக இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் அலுவலர், தடுத்து வைத்திருக்கும் அல்லது கட்டுக்காவலில் வைத்திருக்கும் ஏதேனும் இடத்திலிருந்து அத்தகைய ஆளை அகற்றிச் சென்று ஒரு நேரத்தில் ஏழு நாட்களுக்கு மேற்படாத காலமொன்றுக்கு அத்தகைய அலுவலரின் தற்காலிகக் கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்.

*தகவல் பெறுதற்கான அல்லது பொருளைச் சோதித்தற்கான தத்துவம்.*

66. (1) இவ் ஒழுங்குவிதிகளிலடங்கியுள்ள சிறப்பேற்பாடுகள் எவற்றிற்கும் பங்கமின்றி, ஆள் எவரும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்விதம் செய்யும்படி வேண்டப்படுமிடத்து அவ்விதம் குறிபபிடப்பட்டுள்ளதும் அவர் வசமுள்ளதும் பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுதற்கு அல்லது ஏதேனும் அவசாகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக அத்தகவலைப் பெறுதல் அல்லது பொருளைப் பரிசோதித்தல் அவசியமானது அல்லது உகந்ததென்று, வேண்டுகை விடுக்கும் அதிகாரி அல்லது ஆள் அபிப்பிராயப்படும் அத்தகைய தகவலாய் அல்லது பொருளாய் உள்ளதுமான அத்தகைய செய்தியை அல்லது பொருளை அவ் வேண்டுதலில் குறிபபிடபபடும் அவ் ஆளுக்கு அல்லது அத்தகைய அதிகாரிக்கு கொடுத்தல் வேண்டும், அல்லது காண்பித்தல் வேண்டும். இவ்வொழுங்கு விதியின் கீழ், முறைப்படி விடுக்கப்பட்ட வேண்டுகையைப் பினபற்றி ஏதேனும் தகவலைக் கொடுத்துதவ அல்லது அவரிடமுள்ள பொருளைக் கொடுக்க யாரேனுமொருவர் தவறின் அவர் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.

(2) இந்த ஒழுங்குவிதியில் " பொருள் " என்பது ஏதேனும் புத்தகத்தை, கணக்கை அல்லது பத்திரத்தை உள்ளடக்கும்.

67.—

*தடை செய்யப்பட்ட நிறுவகங்கள்*

68. (1) ஏதேனும் நிறுவகம் ஒன்றின் தொடர்பில் அத்தகைய நிறுவகம் அல்லது அதன் உறுப்பினர் அல்லது அதனைச் சார்ந்தோர் —

(அ) பொதுமக்களின் பாதுகாப்புக்கு, பொதுமக்களின் அமைதி பேணுதலுக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதலுக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்கங்களுக்காக ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் 38 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில், அல்லது 24 ஆம் ஒழுங்குவிதியின் (அ) தொடங்கி (ஏ) வரையிலுள்ள உட்பந்திகளில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள நோக்கங்களுள் எதற்காகவேனும்,

செய்யப்படக்கூடிய அல்லது அதனை அல்லது அவர்களைப் பயன்படுத்தக்கூடிய ஆபத்துண்டென்று முதலமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து அவர் கட்டளையொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் மூலம் அத்தகைய நிறுவகம் தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஏதேனுமொரு நிறுவகம் தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்படுமிடத்து, இவ் ஒழுங்குவிதி, தடைசெய்யப்பட்ட நிறுவகம் செய்து வந்த அல்லது முனபொருபோது செய்து வந்த செயல்களைச் செயலாலொத்த அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் வேறு நிறுவகங்களுககும் ஆளுக்கும் அல்லது ஆட்குழுவுக்கும் அல்லது ஆட்கூட்டத்திற்கும் அது அல்லது அவர் அல்லது அவர்கள் தடைசெய்யப்பட்ட நிறுவகம் என்றுற் போல ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) எந்தவோராளும்—

(அ) தடைசெய்யப்பட்ட நிறுவகம் ஒன்றால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன் மேலாளால் வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் எழுதப்பட்ட விடயங்களை அல்லது அச்சிடப்பட்ட விடயங்களை தோற்றுவிக்க, அச்சிட அல்லது பரப்ப அல்லது தோற்றுவிக்க அல்லது அச்சிட அல்லது பரப்ப எந்த ஒரு வகையிலேனும் தொடர்புபட்டிருக்க ; அல்லது

(ஆ) தடைசெய்யப்பட்ட நிறுவகத்தால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன மேலாளால், செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஏதேனுமொரு கட்டளையை, முடிவை, அல்லது போதனையை வேறோராளுக்கு எந்த வகையிலேனும் அறிவிக்க, அல்லது அறிவிக்க எத்தனிக்க ; அல்லது

(இ) நிறுவகத்தின் அல்லது நிறுவகவுறுப்பினரின் அல்லது நிறுவக மேலாளர்களின் கூட்டத்தைக் கூட்ட அல்லது கூட்டத்திற்கு சமூகமாயிருக்க ; அல்லது

(ஈ) நிறுவகத்தைச் சேரும்படி அல்லது அதற்கு உதவும்படி எந்தவோராளையும் அழைக்க அல்லது போதிக்க ; அல்லது

(உ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகக் காசாக அல்லது வேறு முறையாக உதவு தொகை உதவும்படி வேண்ட அல்லது உதவு தொகை சேர்க்க அல்லது மேல் மொழிந்தவாறு உதவு தொகை உதவ ; அல்லது

(ஊ) நிறுவகத்தின் மேலாள் என்ற முறையில் அல்லது நிறுவகத்தின் உறுப்பினர் என்ற முறையில் அல்லது அத்தகைய மேலாள் அல்லது உறுப்பினர் என்று வேறு ஆட்கள் நம்பும்படி செய்யும் அத்தகைய முறையில் ஏதேனும் செயலை அல்லது அலுவலைச் செய்ய அல்லது செய்ய எத்தனிக்க ; அல்லது

(எ) நிறுவகத்தின் எவ்வுறுப்பினருக்கும் அல்லது நிறுவகத்தின் ஓர் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் எந்த ஆளுக்கும் புகலிடமளிக்க அல்லது அத்தகைய வரை மறைத்து வைத்திருக்க

கூடாது.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது நிறுவகத்தின் உறுப்பினர் அல்லது நிறுவகத்திற்குக் கடன் கொடுப்பவர் விண்ணப்பஞ் செய்ததன்மேல், ஏதேனுமொரு நிறுவகம், இவ்வொழுங்கு விதி ஏற்புடையதாகும் நிறுவகம் ஒன்று என்று மேல் நீதிமன்றத்திற்குத் தோன்றினால், நிறுவகம் வைத்திருந்த அல்லது நிறுவகத்திற்காக வைத்திருக்கப்பட்ட ஆதனம் நீதிமன்றத்தின் உத்தரவின்றிக் கையளிக்கப்படுதலைத் தடுத்தற்குத் தேவையான அத்தகைய கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம் ; மேற்சொல்லப்பட்ட அத்தகைய ஆதனம் பற்றியும் நிறுவகத்தின் அலுவல்களைப் பற்றியும் விசாரணை நடாத்தி அறிக்கை தருமாறு பணிப்பதோடு நிறுவகத்தின் கருமங்களை முடித்துக் கட்டி அதைக் கலைப்பதற்கும், மேற்சொல்லப்பட்டபடியான அத்தகைய ஆதனத்தை அத்தகைய ஏதேனும் விசாரணை, அறிக்கை, நிறுவகத்தை முடித்துக்கட்டல், நிறுவகத்தைக் கலைத்தல் என்பன தொடர்பாக ஏற்பட்ட செலவுகளுக்குப் பயன்படுத்தற்கும், அல்லது விண்ணப்பம் செய்த தேதிக்குப் பின்னர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தோடு நிறுவகம் அடைந்த கடன் பொறுப்பை அடைத்தற்குப் பயன்படுத்துதற்கும் நியாயமானதும் நேர்மையானதும் என்று கருதும் அத்தகைய மேலதிகக் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் செய்யலாம் ; அத்துடன் மேற்சொன்னவாறு பயன்படுத்தும்படி நீதிமன்றத்தாற் பணிக்கப்படாத அத்தகைய ஆதனம் குடியரசுக்கு இழக்கப்படுதல் வேண்டும் என்றும் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) இந்த ஒழுங்குவிதியில் " மேலாளர் " என்ற சொல், ஏதேனும் நிறுவகம் தொடர்பாக வரும்போது நிறுவகத்தின் எந்தவோர் அலுவலர் என்றும், நிறுவகத்தின் மேலாட்சியில் அல்லது கட்டுப்படுத்தலில் பங்குகொள்ளும் யாரேனுமோர் ஆள், அல்லது நிறுவகத்தின் மேலாட்சியில் அல்லது அதனைக் கட்டுப்படுத்தலில் பதவி வகிக்கின்றவரான அல்லது பதவி வகிப்பவராகக் கொள்ளப்படும் யாரேனுமோராள் என்றும் பொருள்படும்.

69. (1) ஒரு சுடுபடைக்கலம், குண்டு, வெடிபொருள் அல்லது பிற கொலைப்பதார்த்தம் அல்லது உபாயம் ஒன்றனைப் பயன்படுத்துகையின் விளைவாகக் காயமடைந்துள்ளவராகத் தோற்றும் காயமடைந்த எந்தவோராளுக்கும் வைத்திய உதவிபுரியும் எந்த ஆளும், அல்லது அத்தகைய காயமடைந்த ஆளொருவரால் வைத்திய உதவி கோரப்படும் எந்த ஆளும், அத்தகைய காயமடைந்த ஆளின் அடையாளம் தொடர்பான விபரங்கள் காயத்தின் விபரங்கள் ஆகியவற்றுடன், எவ்வெவ்விடத்துச் சாத்தியமோ காயம் விளைவிக்கப்பட்ட சூழ்நிலைகள் முதலாயினவற்றையும், பதிவுசெய்வதோடு, அத்தகைய தகவலை ஆகக் கிட்டவுள்ள பொலிசு நிலையத்திற்கு உடனடியாக அளித்தலும் வேண்டும்.

*குண்டுகள் முதலியவற்றால் காயமடைந்தோருக்கு உதவிபுரிதல்.*

(2) பந்தி (1) இல் குறிப்பிடப்பெற்ற தகவலை அறிவித்தற்கு வேண்டுமென்று தவறும் எந்த ஆளும் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

70. (1) முதலமைச்சர், கட்டளையின்மூலம், பெயர் அல்லது பதவி குறிப்பிட்டு, அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் எப்பிரதேசத்திற்குமென, இயைபுபடுத்தும் அலுவலராக இருக்குமாறு எந்த ஆளையும் நியமிக்கலாம்.

*அரசாங்க அதிபரின் தத்துவங்களும் கடமைகளும் அல்லது தொழில்பாடுகளும் ஓர் இயைபுபடுத்தும் அலுவலரால் பிரயோகிக்க அல்லது புரியப் படலாம்.*

(2) முதலமைச்சரால் கட்டளையின்மூலம் இலங்கையின் எப்பிரதேசத்திற்குமென ஓர் இயைபுபடுத்தும் அலுவலர் நியமிக்கப்படுமிடத்து, எந்த எழுத்துருவச் சட்டத்தின் கீழாயினும் அல்லது பிறவாறு ஓர் அரசாங்க அதிபருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவர்மேற் சுமத்தப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் அல்லது தொழிற்பாடுகளையும் அத்தகைய அலுவலர் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதோடு அந் நோக்கத்திற்காக அத்தகைய எழுத்துருவிலான சட்டத்தில் ஓர் அரசாங்க அதிபர் பற்றிய ஒவ்வொரு தொடர்புறுத்துதலும் அப்பிரதேசத்திற்கு ஏற்புடையதாக்கப்படுதலைப் பொறுத்தவரையில் அத்தகைய இயைபுபடுத்தும் அலுவலர் பற்றிய தொடர்புறுத்தலொன்றாகவே கணிக்கப்படுதலும் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.